சுத்தத்திற்கும் சுவைக்கும்
புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு!
சைவ போசனகாரர்
மனதில் என்றும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன்கோவில் சந்தி)
288 காங்கேசன்துறை வீதி

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 21 யாழ்ப்பாணம்
தை 25 ரபி-அவ் 20 வெள்ளிக்கிழமை
இதழ் 361 8-2-80

RECEIVED 1980 PERIODICALS DIVISION
LIBRARY

இறேஸ்லி
கோமாளிகள்
2-80
அரங்கில்
நடைபெறும்
டிக்கற்றுக்கள்
மண்டப வாயிலில்

# இம்முறை மேதின விழாவுக்கு ஜனதிபதியும், பிரதமரும் நடந்தே பவனி செல்வார்கள்

## சீன - ஜப்பான் - கொரியா இலக்குகளைத் தாக்கும் சோவியத்து ஏவுகணைத்தளம்

(டோக்கியோ)

சீனவுக்கும், சைபீரியாவக்கும் இடையிலுள்ள ஆற்றின் கரைகளில் சோவியத் யூனியன் வெகு தூரம் சென்று தாக்கும் ஏவுகணை தளங்களை நிர்மாணித்துள்ளதாக ஜப்பானிய ராணுவ செய்தித் தாபனம் அறிவித்துள்ளது.

இந்த மத்திய ரக ஏவுகணைகள், சீன முழுவதையும், ஜப்பான், கொரிய இலக்குகளையும் சென்று தாக்கக்கூடிய வல்லமை பெற்றவையென்று அச்செய்தி மேலும் கூறியது.

இந்த ஏவுகணைகள் அணு ஆயுதங்களையும் எடுத்துச் சென்று தாக்கக்கூடியவையாம். தென்கிழக்காசியாவும், இந்தியாவின் ஒரு பகுதியும் இந்த ஏவுகணை இலக்கு வட்டத்திற்குள் வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

## வாடகை வாகனங்கள் பாவிக்கத் தடை!

(கொழும்பு)

இம்முறை ஐக்கிய தேசியக்கட்சி கொண்டாடவிருக்கும் மே தின கூட்டத்துக்கு ஜனதிபதியும் பிரதமமந்திரியும் நடந்தே செல்வார்கள்.

காலிமுகத்திடலில் ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டம் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் அருகாமையிலுள்ள ஏனைய ஐக்கியதேசியக்கட்சித் தலைவர்களும் அமைச்சர்களும் அங்கு நடந்தே செல்வார்கள்.

மேதினக் கூட்டங்களில் மக்களைக் கலந்துகொள்ளச் செய்வதற்காக எவரும் வாடகைக்கு பஸ்களையோ, லொறிகளையோ அமர்த்த முடியாது.

ஜனதிபத திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனநேற்று அரசாங்கப் பாராளுமன்றக் கூட்டத்

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாடக விழாவில் பிரதமர் 'பிரேமா' கூறிய சுவையான சம்பவம்!

(கொழும்பு)

நடிகர்களுக்குச் சமயோசிதப் புத்தி இருக்கவேண்டுமென்பதை பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா, தமிழ் நாடக விழாவில உரையாற்றியபோது சுவாரஸ்யமாக எடுத்து விளக்கினர்,

தமது வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைப் பிரதமர் உதாரணமாகச் சொன்னர்.

கல்லூரிநாடகமொன்றை நடத்தும் பொறுப்பு என்னிடம் கொடுக்கப்பட்டது. ஆனல் சக மாணவர் ஒருவருக்கு அது பிடிக்கவில்லை. தமக்கே அந்தப் பொறுப்புத் தரப்படவேண்டும் என்று அவர் விரும்பினர். ஆனல் அதிபர் என்னிடமே பொறுப்பைத் தந்துவிட்டார். நாடகம் நடந்தது. நோய்வாய்ப்பட்டவருக்கு பேய் ஒட்டுவது நாடகத்தில் ஒரு கட்டம், பேய் பிடித்தவராக அந்த மாணவர் நடித்தார். பேய் ஓட்டுபவராக நான் நடித்தேன். நோயாளி மயக்கமுற்றவராக கீழே படுத்திருக்க நான் மந்திரம் சொல்லி பேய்ஓட்டவேண்டும். பேய் ஓட்டப்பட்ட பின் அவரை மயக்கம் தெளிவித்து எழுப்பவேண்டும். ஆனல் அந்த நண்பர் வேண்டுமென்றே எழும்பாமல் இருந்துவிட்டார். நான் மெதுவாகப் பெயரைச் சொல்லியும் எழுப்பிப் பார்த்தேன். அவர் எழும்பவில்லை, உடனே எவருக்கும் தெரியாமல் மந்திரம் ஓதி, தண்ணீர் அடிப்பதுபோல் அவர் மூக்கில் தண்ணீரை ஊற்றினேன். நண்பர் எழுந்துவிட்டார் என்று பிரதமர் நகைச்சுவையாக அந்தச் சம்பவத்தை விளக்கினர்' (ம)

## விபுலானந்த இசைக்கல்லூரி மார்ச் 27-ல் ஜனதிபதி திறந்துவைப்பார்

(கொழும்பு)

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளின் பெயரில் அமையும் இசைக்கல்லூரியை மார்ச்மாதம் 27-ம் திகதி ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கல்லடி உப்போடையிலுள்ள ராமகிருஷ்ணமடத்தின் மணிமண்டபத்தில் ஆரம்பித்துவைப்பார்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையின் அழைப்பின் பேரில் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனஅன்றையதினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து பல பொது நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளவிருக்கிருர்.

திரு. இராசதுரை அரசில் சேர்ந்த சமயம் விடுத்த கோரிக்கைகளில் விபுலானந்த இசைக்கல்லூரியும் ஒன்ருகும்.

அன்றைய தினம் ராமகிருஷ்ண மடத்தின் காணியில் புதிய இசைக்கல்லூரி கட்டிடம், அமைப்பதற்கான அடிக்கல்லையும் ஜனதிபதி நாட்டுவார்.

மற்றும் புதிய பொலிஸ் நிலைய கட்டிடக் திறப்புவிழா புதிய தபால்நிலைய அலுவலகத்திறப்புவிழா போன்றவற்றிலும் அவர் கலந்துகொள்வார். அன்று மாலையில் மட்டக்களப்பு திறந்தவெளியரங்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆடை உற்பத்தியை 'அமிர்' ஆரம்பித்து வைப்பார்

(மாவிட்டபுரம்)

தமிழ் இளைஞர்பேரவையின் உற்பத்தி ஆடைகள் விற்பனை இம்மாதம் 14ம் திகதி கீரிமலை சிவன்கோவிலில் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கத்தினல் ஆரம்பித்து

(8-ம் பக்கம் பார்க்க)

உத்வாஹ முகூர்த்த அழைப்பிதழ்

மாவைக் கந்தசுவாமியாரின் திருவருள் கொண்டு நிகழும் சித்தார்த்தி வருடம் தை மாதம் 25-ம் நாள் (8-2-80) வெள்ளிக்கிழமை பகல் 12-39 மணியிலிருந்து பிற்பகல் 2-10 மணிவரை

பிரமஸ்ரீ ஏ. சோமசுந்தரஐயர் (ஆசிரியர்) அவர்களது புத்திரன் சுப்பிரமணிய சர்மாவிற்கு எமது சிரேஷ்ட புத்திரி தில்லைவாழந்தணர் பரம்பரை திரிபுரசுந்தரியை

எமது அக்கிரஹாரத்தில் கன்னிகாதான பாணிக்கிரகணஞ் செய்துவைக்க நிச்சயிக்கப்பட்டிருப்பதால் உறவினர்களும், நண்பர்களும் இவ்வழைப்பையேற்று குடும்ப சமேதராகச் சமுகம்தந்து தம்பதிகளை வாழ்த்துமாறு அழைக்கின்ருேம்.

8-2 80 வெள்ளி 9-2-80 சனி ஆகிய தினங்களில் எமதில்லத்திலும் 11-2-80 திங்கள் மணமகனில்லத்திலும் வரவேற்புபசாரம் நிகழும்.

இங்ஙனம்

பிரமஸ்ரீ ஏ. சோமசுந்தரஐயர் (ஆசிரியர்) தம்பதிகள்

மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தம்பதிகள்.

4910

## தமிழ்நாடு அமைச்சரவை மாற்றி அமைக்கப்படும்! முதல்வர் எம்.ஜி.ஆர். தகவல்

(சென்னை)

தமிழ்நாடு அமைச்சரவை மாற்றியமைக்கப்படும். அடுத்த மாதம் முதல் திகதியளவில் மாநிலச் சட்டப்பேரவையில் பட்ஜட் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னல் இந்த மந்திரிசபை மாற்றம் பற்றி அறிவிக்கப்படும்.

இத்தகவலைத் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமசந்திரன் நேற்றுப் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

இப்போது பதவியிலிருக்கும் சில அமைச்சர்கள் வெளியேறுவார்களென்றும், சில புதியவர்கள் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களென்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

திரு. சௌந்தரபாண்டியன் அமைச்சரவையிலிருந்து விலகியதன் காரணமாக எழுந்த காலியிடமும் நிரப்பப்படும் என்றும் முதல்வர் கூறினர்.

கட்சிப் பணிக்காக மூத்த அமைச்சர்கள் யாரும் பதவியிலிருந்து விலக விரும்பினல் தாம் அதற்குக் குறுக்கே நிற்கப்போவதில்லையென்றும் முதல்வர் கூறினர்.

5 ஆண்டுகள் பதவியில் இருப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட ஒரு மாநில அரசாங்கத்தை இடையில் பதவியில் இருந்து நீக்குவது நியாயமோ நேர்மையோ அல்லவென்றும் முதலமைச்சர் சொன்னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

சவர்க்காரம் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. அனுபவத்துக்கு ஏற்ற சம்பளம். எழுதுக: சாம் இன்ரநாசனல் கம்பனி, கல்லூரி வீதி, பருத்தித்துறை. 4909

மின்சார மோட்டார். எலெக்றிக் வேலைகளில் அனுபவமுள்ளவர்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். றட்ணம்ஸ், பலாலி வீதி, கோண்டாவில் சந்தி. 4908

நிரந்தர தமிழ் ஆங்கில தட்டெழுத்து எழுதுவினைஞர் உடனே தேவை. திறமைக்கும் நேர்மைக்கும் ஏற்ற ஊதியம் வழங்கப்படும். ஞாயிறு 10-2-80 காலை நேரில் சந்திக்கவும். இல: 93/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 4913

## சுங்க ஏலவிற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் 11-02-1980 காலை 10 மணிக்கு யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் விற்பனையின் முழு நிபந்தனைகளும் 1954-ம் ஆண்டு மே மாதம் 28-ம் திகதி வெளியிடப்பட்ட 10675-ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1-ம் பிரிவு 2-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1. 7940 கால்ச்சட்டை சீப் இணைப்புக்கள்.
2. பென்ஸ் லொறி காஸ் கெற் செற் 2
3. 2 சாரம், 1 பை நீலம் (சிறியது), 4 பைக்கட் ஆடம்பரச் சாமான்கள் 1 சுவிச், 1 மின்மானி.
4. 7 சோடி தங்கக்காதணிகளும், மோதிரமும்.

**எஸ்.எம்.ஜே.சேனரத்தின,**
உதவிச் சுங்க சேகரிப்பாளர்,
யாழ். மாவட்டம்.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
06-02-1930. 905

## சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் பதவி வெற்றிடம் மின்தறித் தொழிற்சாலை முகாமையாளர்

இச் சங்கத்தின் மின்தறித் தொழிற்சாலை முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வயது:**

23 தொடக்கம் 40 வருடம்.

**கல்வித் தகமைகள்:**

க. பொ. த. (சா / த) பரீட்சையில் எண்கணிதம் அல்லது இரசாயனம் உட்பட 6 பாடங்களில் சித்தியும் இதுபோன்ற நிறைவேற்றுப் பதவியில் 1 வருட அனுபவமும், வாப்பிங், வைன்டிங், சைசிங் ஆகியவற்றிலும் புடவை உற்பத்திக்குரிய மின்தறி இயந்திரங்களை இயக்குதல், பராமரித்தல் ஆகியவற்றில் அனுபவமும், உற்பத்தி மதிப்பீடு தயாரிக்கும் ஆற்றலும்.

**வசிப்பிடத்தகமை:**

தொடர்ந்து 2 வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வேதனம்:**

ரூபா 300/- - 485/-

ரூபா 12-50×10+15×4

விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் -/50 சதம் செலுத்திப் பெற்ற படிவத்தில் பூர்த்தியாக்கப்பட்டு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்விச் சான்றிதழ், தொழிற்தகமைச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இருநற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மின்தறித் தொழிற்சாலை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 23-2-80-ல் அல்லது அதற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

**பொதுமுகாமையாளர்,**
சாவகச்சேரி
ப. நோ. கூ. சங்கம்.

சாவகச்சேரி.
01-02-1980. 4904

## சந்தியாப்பிள்ளை சவிரிமுத்து

அவர்களின்

### முதல்வருட நினைவு அஞ்சலி



தோற்றம்: 25-11-1907 மறைவு: 8-2-1979.

இல்லத் தலைவனாகி, இனிய நற் தந்தையாகி,
உற்றவோர் நண்பனாகி, ஊர் போற்றும் உத்தமனாய்
வள்ளல் நிகர் வாழ்க்கையாலே
உலகத்தோர் உள்ளமெல்லாம் உறைகின்றாய்
இத்தரையில் எம்மைவிட்டு நீர் பிரிந்து
இறைவனடி சேர்ந்தாலும் எமைப் பொழுதும்
நாம் மறவோம். இமயம்போல் நீ வாழி.

இவரின் பிரிவால் துயருறும்

**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

73, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

"பாம்குரோவ்"
கரம்பொன்,
ஊர்காவற்றுறை.

4901

## பௌத்த சமய நிகழ்ச்சிகள்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை வெள்ளி விழா அரங்கில் இரு தினங்களாக, இன ஒருமைப்பாட்டைப் பேணும் நோக்கமாக பௌத்த சமய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

சிமெந்துத் தொழிற்சாலை பௌத்த சங்கத்தின் ஆதரவில் இடம் பெற்ற இந்நிகழ்ச்சிகளில் முதல் தினம் பிரித் ஓதுதலும், மறுநாள் காலை தானம் வழங்குதலும் இடம் பெற்றன. இவற்றைத் தொடர்ந்து காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையிலிருந்து பெரஹரா ஊர்வலம் வெள்ளிவிழா அரங்கை வந்தடைந்தது. இவ்வூர்வலத்தில் நடனங்கள், தீப்பந்த விளையாட்டுகள், இசை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றிருந்தன. வடக்கில் வாழும் சிங்கள மக்கள் அனைவரும் இந்நிகழ்ச்சிகளில் வந்து கலந்துகொண்டதுடன், தென்னிலங்கையிலிருந்தும் சிங்கள மக்களும், பௌத்த குருமார்களும் வந்திருந்தனர்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை வளவு முழுவதும் கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டு இரு தினங்களும் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இப்பகுதி தமிழ் மக்களும் இவற்றைப் பார்வையிட்டுச் சென்றனர்.

......

## பிராந்திய அலுவலகம்

(மட்டுநகர்)

காப்புறுதித்திட்டத்தை பன்முகப்படுத்துதல் என்ற நோக்கில் காப்புறுதி கூட்டுத்தாபனத்தால் நிறுவப்பட்டு வரும் பிராந்திய காப்புறுதி கூட்டுத்தாபன அலுவலக தின் கிழக்குப்பிராந்திய அலுவலகம் விரைவில் மட்டக்களப்பில் நிறுவப்படவுள்ளது.

......

## கட்டிடவேலைகள் துரிதம்

(மட்டுநகர்)

கடந்த ஒன்றரை வருட காலமாக நிறுத்திவைக்கப்பட்ட மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலை புதிய அடுக்குமாடி கட்டிடத்திற்கான வேலைகள் மீண்டும் ஆரம்பமாகி சுறுசுறுப்பாக நடைபெற்றுவருகின்றது. (கு)

......

## உடுப்பிட்டிப் பாடசாலைகள் பொருட்காட்சி

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான கல்விப் பொருட்காட்சி இம்மாதம் 28ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும் இப் பொருட்காட்சியில் உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள முப்பத்தைந்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் கலந்துகொள்கின்றன.

இரு தினங்கள் நடைபெறும் இப்பொருட்காட்சிக்கான ஒழுங்குகளை உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வீ. கே. ஈசுரபாதம் கவனித்து வருகின்றார். (கு)

......

## 'விஞ்ஞானத் தமிழ் ஏடு

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞானத் தமிழ் ஏடொன்றை விரைவில் காண்டாமாறு வெளிக்கள நிலையம் வெளியிட இருக்கிறது.

மாணவர், ஆசிரியர், ஆய்வாளர், பொதுமக்கள் ஆகிய அனைவர்க்கும் பயன்படும் வகையில் இவ்விதழ் அமையும். வெளிக்கள நிலையம் இதுவரை ஆங்கிலத்தில் மட்டுமே இதழொன்றை வெளியிட்டது [illegible] (கு)

## 'அரசகாணிகளில்அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படும்'

(யாழ்ப்பாணம்)

"அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களிலும், தனியாருக்குச் சொந்தமான நிலங்களிலும் வீட்டுத்தோட்டம், கால்நடைவளர்ப்பு, கோழிப்பண்ணை, நன்னீர் மீன்வளர்ப்பு போன்றவற்றைச் செய்வதற்கு ஊக்குவிப்பதென்றும், கிராம ரீதியில் இவற்றைச் செயல்படுத்த கருத்தரங்குகள் நடத்துவதெனவும், வட்டுக்கோட்டைத் தொகுதி பொருளாதார அபிவிருத்திச் சங்கம் ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

வட்டுக்கோட்டைத்தொகுதி சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் சித்தன்கேணி மாதர் முன்னேற்றச் சங்க மண்டபத்தில் டாக்டர் க. கங்காதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோதே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் சென்ற ஆண்டில் நிலைநாட்டிய சாதனைகளை சபை ஏற்றுக்கொண்டதுடன் பொருளாதாரத்தை பெருக்கிவேலைவாய்ப்பை உண்டாக்கப் பலதிட்டங்கள் நிபுணர்களால் வகுக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. அத்திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள ஏழுகிராம சபைகளிலும் இருந்து கிராமரீதியில் 14 அங்கத்தவர்கள் அதிகார சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். 4 உபகுழுக்கள் உருவாக்கப்பட்டு அவர்களுக்குள்ள பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பின் வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் டாக்டர் க. கங்காதரம்பிள்ளை, உபதலைவர்கள் திருவாளர்கள் எம். எஸ். கந்தையா, (அமைப்பாளர்) கே. செல்வராசா, கே. கணபதிப்பிள்ளை. பொதுக்காரியதரிசி: திரு. என்.சிவராசா, பொருளாளர்: திரு. அ. எதிர்வீரசிங்கம், திட்ட ஆலோசகர் திரு. ஆர். கருணைராசா. (கொ-கு)

### மட்டக்களப்பு மாவட்டம்:

## பாடசாலைக் கட்டிடங்களுக்கு பரவலாக நிதிஉதவி

### பிராந்திய அமைச்சர் ஏற்பாடு

(மட்டக்களப்பு)

மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை, அண்மையில் மட்டக்களப்புத் தொகுதியிலுள்ள பல பாடசாலைகளுக்கும் விஜயம் செய்து, பாடசாலைக் கட்டட வசதிகள் குறித்து நேரில்பார்வையிட்டார்.

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம் புதிய இருமாடிக்கட்டிடங்களை பெறுகின்றன. இதற்காக அமைச்சர் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒன்றரை லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்.

மட்டக்களப்பு கோட்டாமுனை மகாவித்தியாலயத்தின் ஆலயத்தைபுனரமைப்புச் செய்ய ஐயாயிரம் ரூபாயும், வித்தியாலயத்தைச்சுற்றிமதில் அமைக்க 25,000 ரூபாயும் மற்றும் குழாய் நீர்வசதிக்காகவும் அமைச்சரினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவுத் செலவு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் பாடசாலைக்கு புதிதாக இருமாடிக்கட்டிடங்கள் அமைச்சரினால் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. இதற்காக பாடசாலைக்கு அருகேயுள்ள தனியாரின் காணியை பெற்றுத்தருவதற்கு அமைச்சர் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

மட்டக்களப்பு தாண்டவன்வெளி ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையை சுற்றி மதில் மற்றும் மலசலகூடம் என்பன அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலயத்திற்கு ஒன்றரை லட்சம் ரூபா செலவில் இருமாடிக் கட்டிடங்கள் அமையவுள்ளன. இப்பாடசாலையின் பழைய மாணவன் என்றவையில் வாசிகசாலைக்கு அமைச்சர் ஆயிரம் ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார்.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டிடம் அமைக்கப்படும். அத்தோடு அருகிலுள்ள பழைய சவக்காலை, பாடசாலை விளையாட்டுமைதானத்திற்கு அமைச்சரினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அதனைச் சுற்றி மதில் அமைப்பதற்காக இருபத்தையாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை கல்வி அதிகாரி திரு. க. யோ. முத்துராஜா தெரிவித்துள்ளார்.

### ஈழநாடு' ஆ ரவு உதைபந்தாட்டம்:

## சாம்பியன் போட்டிகள் நாளை நடைபெறுகின்றன

(பலாலி)

'ஈழநாடு' ஆதரவில் வயாவிளான் ஞான வைரவர் சனமூக நிலையம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சாம்பியன் போட்டிகள் நாளை வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

11 வீரர் போட்டியில் 23 கோஷ்டிகளும், 7 வீரர் போட்டியில் 20 கோஷ்டிகளுமாக மொத்தம் 43 கோஷ்டிகள் பங்குபற்றியிருந்த இப்போட்டியில் நாளைய இறுதிப்போட்டியில் 11 வீரர் சாம்பியன் ஆட்டத்தில் ஈவினை-பறக்கும் இளைஞர் வி. கழகமும், மயிலங்காடு-ஸ்ரீமுருகன் வி. கழகமும் கலந்துகொள்ளும். 7 வீரர் சாம்பியன்ஆட்டத்தில் ஏழாலை [illegible]காட்டுர் வி. கழகமும் கொக்குவில் சண் ஸ்ரார் வி. கழகமும் கலந்துகொள்ளும்.

7 வீரர் போட்டியை திரு. ரி சீவரத்தினம் தொடக்கிவைப்பார். 11 வீரர் போட்டியை திரு. வீ. தம்பாப்பிள்ளை தொடக்கிவைப்பார்.

11 வீரர் போட்டியில் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்படும் கோஷ்டிக்கு அமரர் சி. கந்தவனம் ஞாபகார்த்தச் சுற்றுக் கேடயமும், அமரர் வல்லிபுரம் ஞாபகார்த்தமாக திரு. வ. தருமராசா அன்பளிப்புச் செய்த வெற்றிக் கிண்ணமும் பரிசளிக்கப்படும்.

7 வீரர் போட்டியில் சாம்பியன் கோஷ்டிக்கு காங்கேசந்துறை மகாவித்தியாலய ஆசிரியை திருமதி ஈ. எஸ். முருகையா அன்பளிப்பு வெற்றிக்கிண்ணமும், அமரர் சி. கனகசபை ஞாபகார்த்தமாக திரு. க. ஜெயச்சந்திரகுமார்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இம்சையால் வருவதாகத் தோன்றும் நன்மை, தோற்றம் மாத்திரத்தில்தான் உள்ளது. அதனுல் வரும் தீமை என்னும் நிற்கும். ஆகையால் இம்சையைத் தவிர்க்கவேண்டும்.

-மகாத்மா காந்தி

## மக்கள் கருத்து

### வீடமைப்புக் கடன்கள்

வீடற்ற மக்களுக்கு வீடுகளை வழங்குவோம் என்று வாக்குறுதியளித்து ஆட்சிக்குவந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் தனது வாக்குறுதியை மிக வேகமாகவே நிறைவேற்றிவருவது யாவரும் அறிந்ததே.

யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய வீடமைப்புத் திணைக்களமும் பல திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்றிவருகின்றபோதிலும் தற்போது வழங்கிவரும் வீடமைப்புக் கடன்களை நிறுத்தியுள்ளது. வீடற்ற வறிய மக்களே இவ்வாறு அரசாங்கத்தால் கடன் பெற்று வீடுகளைக் கட்டுவதற்கும் வீடுகளை வாங்குவதற்கும் முயற்சிக்கின்றனர். இவர்களுக்கு கடன் வழங்காது திடீரென நிறுத்தியமை பெரும் அதிர்ச்சியையே கொடுத்துள்ளது. எனவே தொடர்ந்து அக்கடன்களை வழங்க, சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் கிராமிய வீடுகள் புனரமைக்கவென அரசாங்கத்தால் காணி உறுதியைப் பிணையாகப் பெறுமல் முன்னர் வழங்கப்பட்டுவந்த 4 ஆயிரம் ரூபா கடன் சில காலம் 10 ஆயிரம் ரூபாவாக உயர்த்தி வழங்கப்பட்டுவந்தது. ஆனுல் இவை இப்போது மீண்டும் 4 ஆயிரம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனையும் உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்களுடன் நெருங்கிய தொடர்புள்ள யாழ். வீடமைப்புத் திணைக்களத்தில் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதெனில் உதவி ஆணையாளருடன் தொடர்பு கொண்டு அவர் மூலமாகவே தொடர்புகொள்ளவேண்டியுள்ளது. அலுவலக ஊழியர்களுடனுன உள்ளக தொலைபேசி இணைப்பும் அங்கு இல்லாததால் மக்கள் மிகுந்த சிரமம் அடையவேண்டியுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

**கே. மகேந்திரமோகன்**
கரம்பன்

ஃ ஃ ஃ

### ஒரு பதில்

''ஈழநாடு'' மக்கள் கருத்தில் 'சோதிடர்கள் கூறுவார்களா' என்ற சவாலை சோதிட அபிமானி ராமகிருஷ்ணன், மடத்தடி, தெல்லிப்பழை என்ற விலாசத்திலிருந்து கிளப்பியிருந்தார்.

ஈரானில் பணயக் கைதிகள் சம்பவம் 4-11-79 அன்று ஆரம்பம். அது இன்னும் 45 நாட்களுக்குள் அமெரிக்காவுக்கு அவமானம் அளிக்கும் வண்ணமான முறையில் முடிவடையும். பணயக் கைதிகள், திரும்பிப்போவது அசாத்தியம்; அவர்களின் உயிருக்கு ஆபத்து நேரிடும். ஈரான் தேசத்திற்கும் பெரும் கேடு விளையும் என்பதுதான் நிமித்தக் கூற்று.

**வ. ஆறுமுகம்**
பண்ணாகம் தெற்கு
சுளிபுரம்

## "அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம்

# வாழ்நாள்முழுவதும் தமிழினத்தின் விமோசனத்திற்காக உழைத்தார்"

-திருமதி அ. சாமிநாதர் (மா.உ.)
(செயலாளர்-அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் ஞாபகார்த்தக்குழு)

**பல** சகாப்தங்களாக தமிழினத்திற்கு வழிகாட்டி, தலைமைதாங்கி, மனித வாழ்க்கையின் உன்னதப் பண்புகளையும் மனித கௌரவத்தையும் கடைப்பிடித்து நின்ற பெருந் தலைவர் பேரறிஞர் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களாகும். அவர் எம்மைவிட்டுப் பிரிந்து 3 ஆண்டுகள் மறைந்துவிட்டன என்பதனை நாம் மறக்க முனைந்தாலும் மறக்கமுடியாது.



தமிழ்ச் சமுதாயம் தமது பாதுகாவலனை, இன, மொழி விடுதலைக்கான அரசியல் பொருளாதார விடுதலைக்காகத் தனது வாழ்நாளின் இறுதிக்காலம் வரை வாழ்ந்த தலைவனை இழந்துவிட்டது. உலகம் ஆற்றல்மிக்க ஓர் சிந்தனையாளரை, தீர்க்கதரிசியை மாபெரும் சட்டமாமேதையை தனிப்பெருந் தலைவரை இழந்து விட்டது.

திரு. ஜி. ஜி. வாழ்கிறுர், அவர் காலத்திலேயே வாழுகின்றேம் என்ற எண்ணமே ஈழம் வாழ் தமிழினத்திற்குப் பாதுகாப்பாக இருந்தது, தமிழினத்தின் தன்மானத்திற்குச் சவால் விடப்பட்ட வேளையிலே வைத்திய நிபுணர்களின் ஆலோசனையையும் மதியாது தனது உயிரைப் பணயம் வைத்து ''ட்ரயல் அற் பார்'' நீதிமன்றத்தில் தமிழ்த் தலைவர்களுக்காகத் துணிந்து நின்று சவாலை ஏற்று வாதாடி அவர்களை மீட்டார். தனது கடைசி மூச்சு காற்றிலே கலக்கும் வரை தமது இனத்திற்காக உழைத்துக்கொண்டிருந்தவர் 50 ஆண்டுகளுக்கு முன்பாக உறங்கிக்கிடந்த தமிழினத்தின் அடிமை நிலைகண்டு, சிறுத்தையாய், சிங்கமாய் புயலாய், பூகம்பமாய் கிளர்ந்தெழுந்து விழிப்புணர்ச்சியூட்டித் தட்டியெழுப்பிய மாவீரனாக அரசியலில் காலடி எடுத்து வைத்தவர். நம்மைவிட்டுப் பிரியும் வரை தனிப்பெருந் தலைவராக முடிசூடா மன்னனுக, தலைசிறந்த அரசியல் மேதாவியாக பெரும் சக்தியாக விளங்கினுர்.

பிரபல எழுத்தாளரான 'கல்கி' கூட தனது இலங்கை விஜயம் என்ற புத்தகத்தில் ஜி. ஜி. யைப் பற்றிக் குறிப்பிடும்போது,

''குமுறும் எரிமலையை நான் கண்டேன்'' என்று அன்றே குறிப்பிட்டுள்ளார்.

''ஜி.ஜி. ''இல்லையென்றுல்-''தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'' என்ற உணர்ச்சியூட்டப்பட்டிருக்காது. அந்த உணர்ச்சியை ஊட்டியவர், இறக்கும் வரை அதற்கு இலக்கணமாகவே வாழ்ந்தார். 1901-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ம் திகதி வடமராட்சியில் உள்ள அல்வாய் என்னும்சிற்றூரில் பிறந்த அமரர் பொன்னம்பலம் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும், பின்பு கொழும்பு சென். ஜோசேப் கல்லூரியிலும் கற்றுர். பின்பு தனது 18 வயதிலே உயர்தரக் கல்வியைப் பெற சர்வகலாசாலையால் வழங்கப்படும் வித்தியாபரிசைப் பெற்று இங்கிலாந்து சென்றுர். கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பட்டதாரியாக லிங்கன்ஸ் இன்னில் பாரிஸ்டர்பட்டம்பெற்று வழக்

(7-ம் பக்கம் பார்க்க)

# வசதிக்கட்டணத்தில் பத்துவீதம் பாடசாலை நூலகத்திற்கு வேண்டும்

-- கா. மாணிக்கவாசகர் --

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நூலகக் கருத்தரங்கில் யாழ். மத்திய கல்லூரி நூலகர் கா. மாணிக்கவாசகர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.

**இ**ந்நாட்டிலுள்ள உயர்தர பாடசாலைகளிலுள்ள நூலகங்களின் இன்றைய தரக்குறைவான நிலைக்கு இலங்கை நூலகச்சேவைகள் சபையும் கல்வி அமைச்சுமே முழுமுதற் காரணமாயிருக்கின்றன. பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக்கள் நடைபெறுகின்ற கல்லூரிகளில் அரசாங்கம் வழங்கும் சம்பளத்தையும் வசதிகளையும் விட ஆண்டொன்றுக்கு அறுபதாயிரம் முதல் ஒருலட்சம்ரூபா வரை சேவை வசதிக்கட்டணமாக மாணவர்களிடமிருந்து அறவிடப்படுகின்றது. இதில் இருபத்தையாயிரத்துக்கு மேல் விளையாட்டுக்களுக்குச் செலவிடப்படுகின்றது. நூலகத்திற்கென மூவாயிரம் ரூபாவைக் கூடச் செலவிடுவதில்லை. ஆனுல் இவ்வித வருமானம் பெறுகின்ற கல்லூரிகள் இந்நாட்டில் இருக்கின்றன என்பது நூலக சேவைகள் சபைக்குத் தெரியாத நிலையாயிருக்கின்றது.

பாடசாலைகளில் ஏன் இந்த இழிநிலை என்று நூலகச் சபையாவது கல்வியமைச்சாவது கேட்பதில்லை. கல்லூரி அதிபர்களின் தயவில் நூலகங்களை விட்டு விடுவதால்இந் நூலகங்கள்பாழாகின்றன விஞ்ஞான பாடம் முதல் விளையாட்டுப்போட்டி வரை சீராக நடைபெறுவதற்குக் கல்வி அமைச்சு சுற்றறிக்கைகள் அனுப்பிய வண்ணமிருக்கின்றன ஆனுல் அரசாங்கத்திற்குச் செலவு ஏற்படாத நிலையில் பெற்றேரின் வருமானத்தில் ஒருபகுதியை விழுங்கிக் கொண்டிருக்கின்ற இக்கல்லூரிகளுக்குப் படிப்பதற்காகவே மாணவர்கள் கொடுக்கின்ற பணம் பாழாகிறது.

எவ்விஷயத்திலும் தம்மைக் கேட்டாற்தான் கல்வி அமைச்சுக்கு அபிப்பிராயம் தெரிவிப்போம் என்று நூலக சேவைகள் சபை தமது பொறுப்பைத் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறது. கல்வி அமைச்சுக்கு அந்தக் கவலையே இல்லை. பல வருஷங்களுக்கு முன்னர் இலங்கை நூலகச் சங்கம் எடுத்த முயற்சியால் பாடசாலை நிருவாகம் பற்றிய அதிபர்களுக்கான அறிவுறுத்தல்கள் என்ற கையேட்டில் நூல்களைச் சிதைய விடாது தக்க சமயத்தில் மீண்டும் கட்டுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனுல் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்படவேண்டும் என்று ஆண்டாண்டு காலமாகச் சொல்லி வந்தது புத்தகங்களின் விலையைப் பொறுத்த வரையில் உண்மையாகி விட்ட இந்நாளிற்கூட கிழித்து போகும் புத்தகங்களை மீண்டும் கட்ட வேண்டும் என்பது சில அதிபர்களுக்கு ஒரு ''போபியா'' ஆகிவிட்டது இதனுல் சில பாடசாலை நூலகங்களிலுள்ள புத்தகங்கள் முற்பக்கங்களிற் சிலவும் முடிவும் இல்லாமல் சஸ்பென்ஸ் ஆக இருக்கின்றன.

பாடசாலைகளுக்குப் பெற்றுர் தம்மை ஒறுத்துக் கொடுக்கின்ற பணம் தமது பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கும் அவர்களின் வருங்காலத்திற்கும் பயன்பட வேண்டுமானுல் வசதிப்பண வருமானத்தில் பத்து சதவிகிதத்தை ஒவ்வொரு பாடசாலையும் அதன் நூலகத்திற் செலவிட வேண்டுமெனக்கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களைப் பணிக்க வேண்டும். இது இவ்வாறு

(6-ம் பக்கம் பார்க்க)

# அமரர் ந. பாலசுப்பிரமணியம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் பத்து ஆண்டுகள் பொதுச்செயலாளராக இருந்தவரும், சட்டத்தரணியுமாகிய ந, பாலசுப்பிரமணியம் (பாலா) அமரத்துவமடைத்து இன்றுடன் ஒரு மாதம் ஆகின்றது. அன்னுரது சிரார்த்ததினத்தில் அவரது அளப்பரிய சேவைகளை அளவிடுவது அவரது ஆன்மசாந்திக்கு அவசியமாகின்றது.

அரசினர் தமிழ் ஆசிரியர் தொழிற்சங்கத்தில் சேர்ந்திருந்த பாலா 1969ம் ஆண்டு அத்தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளராகத்

### 'புத்தொளி'

தெரிவு செய்யப்பட்டார். அன்று தொடக்கம் 1979 வரை சுமார் 10 ஆண்டுகள் தொடர்ந்து பொதுச்செயலாளராகத் திகழ்ந்து தமிழாசிரியர் நிலையை சமுதாயத்தில் உயர்த்த அயராது இரவு பகலாக உழைத்தார்.

ஆசிரிய தொழிற்சங்கவேலைகளுக்கு மத்தியிலும் தமிழாசிரியராக இருந்தும் சட்டப்படிப்பையும் கவனித்து 1978ம் ஆண்டு சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்தார். தமிழாசிரியர் உலகம் அப்போது பாலாவின் தனித்துவத்தை திறமையை எண்ணி மகிழ்ந்தது.

ஆசிரிய மாநாடுகளுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கை ஆசிரியர்களின் பிரதிநிதியாக ஆசிரியர்உரிமைகளுக்காகக் குரல் எழுப்பினுர்.

பாலாவின் தனித்திறமையினுலும் தன்னலமற்ற சேவையினுலும் சிங்கள தமிழ் முஸ்லிம் ஆசிரியர்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குடன் விளங்கியதால் 1975-76ல் இலங்கை ஆசிரிய தொழிற்சங்க சம்மேளனத்தின் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தமிழ் மக்களிடம் ஒற்றுமை இல்லையே என்று ஏங்கியிருந்த நேரத்தில் தமிழ் மக்களுக்கு முன்னேடியாக வெவ்வேறு சங்கங்களாக இருந்த அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கத்தையும்' தமிழாசிரியர் சங்கத்தையும் ஒன்றிணைக்க பாலா அயராது உழைத்து இருசங்கங்களையும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 19-1-74ல் ஒன்றிணைத்து இலங்கைத் தமிழர் ஆசியர் சங்கமாக மிளிரச் செய்தார்.

ஆசிரிய தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளை பகிரங்கமாக ஆதரிக்காதிருந்தபோது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்து நிற்கிறது என்ற தீர்மானத்தைச் [illegible] சமர்ப்பித்து 1976 ஆவணியில்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அடையாள அட்டை பெருதோர்மீது

# சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

## அரசு எச்சரிக்கை

(கொழும்பு)

18 வயதுக்கு மேற்பட்ட சகலரையும் தேசிய அடையாள அட்டைகளை எடுக்குமாறும் எடுக்கத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுவரை 75 லட்சம் பேர் மட்டுமே அடையாள அட்டைகளை எடுத்துள்ளனர் என்றும் 5 லட்சம் பேர் எடுக்காமல் இருக்கின்றனர் என்றும் ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

20 ஆயிரம் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படாமல் திணைக்களத்தில் தேங்கிக்கிடக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது (ஒ)

அ. இ. திருவள்ளுவர் மகாசபை:

# 30-வது மகாநாடு கோப்பாயில் நடைபெறும்

(அரியாலை)

''இந்தியாவில் நடைபெற்ற லோகசபைக்கான பொதுத் தேர்தலில் தாழ்த்தப்பட்ட மக்கள் தாம்விரும்பும் வேட்பாளருக்குவாக்களிக்கவிடாமல் வன்செயல்மூலம் தடுத்தமை மனித உரிமையை மீறும் செயலாக அமைகிறது. இதற்கு உடந்தையாக இருந்த சகல இயக்கங்களின் நடவடிக்கைகளையும் இச்சபை கண்டிப்பதுடன், இன, மத, மொழி வேறுபாடுகள் காரணமாக இப்படியான நிலைமை தொடர்ந்தும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியையும் இந்திய ஜனாதிபதியையும் இச்சபை கேட்டுக்கொள்ளுகிறது''.

இவ்வாறு கோரும் தீர்மானம், அரியாலையில் நடைபெற்ற அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் பொதுநிர்வாகசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மகாசபைத்தலைவர் திரு. எம். சிவதாசன் தலைமையில் நடைபெற்ற பொதுநிர்வாக சபையில், மகாசபையின் 30வது வருடாந்த மகாநாட்டை கோப்பாயில் நடாத்துவதென்றும், இம் மகாநாட்டிற்குயாழ்.மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோனையும், மாவட்ட அமைச்சின்செயலாளரும் யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியையும் கோப்பாய் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளையையும் பிரதம அதிதிகளாக அழைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

காங்கேசன்துறைத் தொகுதி:

# வசந்தபுரத்தில் வீடமைப்புத் திட்டம்

## 90 வீடுகள் அமைக்கப்படும்

(மாவிட்டபுரம்)

காங்கேன்துறைத் தொகுதியில் கீரிமலையையடுத்த, வசந்தபுரத்தில், கிராம விஸ்தரிப்புத திட்டத்தின் கீழ் 90 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

சுயஉதவியின் அடிப்படையில் இவ்வாறு தொகுதிகள் தோறும் வீடுகளை அமைக்கும் அரசின் முடிவிற்கமைய காங்கேசன்துறைத் தொகுதியில் இவ்வீடுகளை அமைக்கக் கீரிமலையையடுத்த வசந்தபுரம் தெரிவு செய்யப்பட்டு இவ்விடத்தைக் காங்கேசன்துறை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கமும், யாழ். வீடமைப்புத் திணைக்கள அதிகாரிகளும் சென்று பார்வையிட்டனர்.

இங்கு 48காணித்துண்டுகள் பிரிக்கப்பட்டு, அவற்றில் 90 வீடுகள் வரையில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் இக் கிராமத்தில் வீடற்று வாழும் ஏராளமான ஏழைமக்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தைத் துரிதகதியில் செய்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். வீடமைப்புத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

## வானமாமலை மறைவுக்கு அனுதாபம்

(கொழும்பு)

இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இலக்கியப்பாலமாகத் திகழ்ந்தவர் பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள். தாமரை, ஆராய்ச்சி போன்ற இதழ்களின் மூலம் எண்ணற்ற ஈழத்து எழுத்தாளர்களையும் அவர்தம் ஆக்கங்களையும் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தினார்''.

இவ்வாறு மறைந்த தமிழக எழுத்தாளரும் விமர்சகருமான நா. வானமாமலை அவர்களின் குடும்பத்தாருக்கு கொழும்பு, கலை இலக்கிய நண்பர் கழகச் செயலாளர் திரு. நெல்லை க. பேரன் அனுப்பி வைத்துள்ள அனுதாபத் தந்தியில் குறிப்பிட்டுள்ளார். (கு)

## கரடியனாறில் பெண்கள் விவசாய பயிற்சி நிலையம்

(மட்டக்களப்பு)

திருநெல்வேலி பெண்கள் விவசாயப் பயிற்சி நிலையம் போன்று கரடியனாறு விவசாய பண்ணையிலும் தமிழ் பெண்களுக்கான பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகத்தின் வேண்டுகோளின் பேரில் இப் பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்க காணி விவசாய ஆராய்ச்சி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா உத்தரவிட்டுள்ளார். (கு)

## பல்கலைக்கழக மாணவருக்கு கடன் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வளர்ந்துவரும் வாழ்க்கைச் செலவுகளுக்கேற்ப பல்கலைக்கழக மாணவர்களது கடன் தொகையையும் அதிகரிக்க வேண்டுமென பல்கலைக்கழக ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளது.

தற்போது மாதாந்தம் பெற்றுவரும் ரூ. 225-50 சதத்தோடு மேலதிகமாக ரூ. 45-50 சதத்தை மாணவர்களுக்கு வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. (நா)

......

## நாளை அமரர் ஜி.ஜி. நினைவுதினகூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் 3வது நினைவுதினக் கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை யாழ். நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம்தலைமையில்நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திருவாளர்கள் கே.வி.எஸ் சண்முகநாதன், ஜிம்மி இராசரத்தினம், ஆர். என். சிவப்பிரகாசம், எஸ். இளையதம்பி சி. மோதிலால்நேரு, எம். சிறீதரன் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம், ரி. மகேந்திரராசா, ஆர் ஈ ஆனந்தராசா மற்றும் பலரும் உரையாற்றுவார்கள் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் ஞாபகார்த்தகுழு இக்கூட்டத்தை ஒழுங்குசெய்துள்ளது. (கொ)

......

## மறைந்த தலைவர்களின் பெயர் சூட்டப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபைக்கு சொந்தமான மூன்று வீடமைப்புத் திட்டங்களுக்கு மறைந்த தலைவர்களின் நாமம் சூட்டப்படும்.

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரையின் உத்தரவின் பிரகாரம் இதற்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் திரு. [illegible] ஜகுரு மேற்கொண்டு வருகிருர்.

எல்லைவீதி, பார்வீதி, நாவற்குடா வீடமைப்புத்திட்டங்கள் முறையே திசவீரசிங்கம் சதுக்கம், கதிர்காமர் சதுக்கம், நல்லையா சதுக்கம் என்ற பெயரைப் பெற்றுள்ளன. (கு)

கோண்டாவில் மேற்கு

# மகாகணபதிப்பிள்ளையார் மகாகும்பாபிஷேகம்

ஈழவளத்திருநாட்டின் யாழ். நகரில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சீதப்புனல் வயல்சூழ் நந்தாவிலின் வடபால் அமைந்துள்ள கோண்டாவில் மேற்கில் ''கந்தர்வளவு'' எனும் பதியில் 'காளி கோவில்' என்று அவ்வூர் ஆதிசைவப் பெருங்குடி மக்களால் பக்தி சிரத்தையுடன் அழைக்கப்படும் ''கந்தர் வளவு'' மகாகணபதிப்பிள்ளையார் கோவிலில் கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீமகாகணபதிப்பிள்ளையாருக்கு திரிதள விமானம் அமைத்தும் ஏனைய இராஜ இராஜேஸ்வரி அம்பாள் வைரவர் முதலிய பரிவாரமூர்த்திகளுக்கும் மங்களகரமாக இன்று வெள்ளிக்கிழமை சுவாதி நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுபநேரமான காலை 8-38 தொடக்கம் 9.38 வரையுமுள்ள மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

கர்ணபரம்பரையாக பல அற்புதங்களைக் கொண்ட இவ்வாலயத்தின் மகா கும்பாபிஷேக கிரியாகால நிகழ்ச்சிகள் கடந்த 6-ம் திகதி காலை ஆரம்பமானது.

இவ்வாலய மகாகும்பாபிஷேகத்தை ஈழவள நாட்டின் பல பாகங்களிலுமுள்ள சைவ ஆலயங்கள் பலவற்றின் கும்பாபிஷேகங்களை ஆசார முறைப்படி நேர்த்தியாக நடாத்திவரும் கும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியார் 'கிரியாகலாபபூஷணம்' சிவஸ்ரீ ச. மகேஸ்வர சிவாச்சாரியார் (நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்) இன்று காலை 6-00 மணி முதல் நடாத்தி வைப்பார். இவரது கிரியாகால நிகழ்ச்சிகளுக்கு சுமார் பத்து பிரதம குருக்கள்மார் ஒத்தாசை புரிகிருர்கள் ஆலயத்தின் பிரதம அர்ச்சகர் பிரம்மஸ்ரீ க. ஸ்ரீஸ்கந்தராச சர்மாவின் ஐந்தாண்டு அயராத பக்தி சிரத்தையுடன் கூடிய நன்முயற்சியினாலும் விக்கினங்களைத் தீர்க்க வல்ல விநாயகப் பெருமானின் கடாட்சம் பெற்ற அடியார்களின் மனமொத்த ஒத்துழைப்பினாலும் இன்று கைகூடும் இப்புண்ணிய கைங்கரியத்தினால் இம்மை நலன்களையும் மறுமைப்பயன்களையும் பெற்று நலமான - வளமான பக்தி சிரத்தையுடன் கூடிய நல்வாழ்வு எய்துவார்கள் என்பது திண்ணம்.

மு. வாமதேவன்

# கலைகளைப் பாதுகாக்கும் நிலையில் உள்ளோம்''

## வட்டு. எம். பி. உரை

(மாவிட்டபுரம்)

''மிருதங்க அரங்கேற்றம் என்று கூறும்போது அநேகமாக ஆண்களே அரங்கேறுவார்கள். ஆனால் இன்று பெண்களும் மிருதங்கத்தில் தேர்ச்சி பெற்று அரங்கேறுவதைப் பார்க்கும்போது ஆண்களுக்கு பெண்களும் சமமாக உயர்ந்துவிட்டார்கள் என்றே எண்ணத்தோன்றுகின்றது. தமிழ் மகளிர் இன்று கலைத்துறையில் மட்டுமல்ல ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர்.

இவ்வாறு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற செல்வி சுந்தரகுமாரி சோமசுந்தரத்தின் மிருதங்க அரங்கேற்றத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய வட்டுக்கோட்டை எம். பி. திரு, தா. திருநாவுக்கரசு கூறினர்.

அவர் மேலும் பேசும்போது கூறியதாவது--

பண்டைக்காலத்தில் மன்னர்கள் கலையைப்பேணி வளர்த்து வந்தனர். ஆனால் இன்றோ நாம்தான் எமது கலைகளை வளர்க்க வேண்டிய நிலையில் உள்ளோம். தமிழ் மக்கள் மத்தியில் சுதந்திரம் பெறுவதற்கான லட்சிய வேட்கை ஏற்பட்டதன் காரணமாக கலைவளர்ச்சியிலும் அதிக அக்கறை காட்டப்பட்டுவருகிறது. கலைஞர்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டால் தான் கலைகள் வளரமுடியும். ஆகவே கலைஞர்களுக்கு வேண்டிய உதவிகளை அளித்து கலைகளைக் காப்பாற்றுவோம் என்ருர்.

வடமாநில கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் பேசும்போது கூறியதாவது: எமது கலை 5000ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமை வாய்ந்தது. ஆனால் இன்று காலத்திற்கேற்றவாறு புதுமைகள் புகுத்தப்பட்டுக் கலைமிளிர்கிறது. புதுமைகள் வரவேற்கத் தக்கவை. ஆனால் அவை வரம்பைமீறி விடக்கூடாது.

மகாராஜஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள், இசைவிரிவுரையாளர் பொன் தெய்வேந்திரம் ஆகியோர் உரையாற்றினார்கள். (க)

# ''உயிர்களைக் காப்பாற்ற இரத்ததானம் அவசியம்''

[அரியாலை]

''தருமம் தலை தாக்கும் இரத்ததானம் உயிர் காக்கும், எல்லாத் தானங்களிலும் மிகவும் சிறந்தது இரத்ததானமாகும். விபத்துக்களில் அகப்படுவோருக்கும், பிள்ளைப்பேற்றின்போது இரத்தப்பெருக்கு ஏற்படும் பெண்களுக்கும் - இரணசிகிச்சை பெறுவோருக்கும் இரத்தம் அவசியம் தேவையாகும். மரணத்தின்பிடியிலிருந்து உயிர்களைக் காப்பாற்ற வைத்தியர்களுக்கு இரத்தம் தேவையாக இருக்கிறது. இந்த இரத்தத் தேவையை நாம் தானமாக வழங்க முன்வந்தால் நாம் உயிர்களைக் காப்பாற்றுபவர்களாவோம்''

இவ்வாறு யாழ் அரசினர் வைத்தியசாலை இரத்தவங்கிப் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி [திருமதி] நடராசா யாழ். பரியோவான் கல்லூரி பிறவுண் ஞாபகமண்டபத்தில் நடைபெற்ற மாணவர் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. சீ. ஈ. ஆனந்தராஜன் தலைமையில் நடைபெற்ற மாணவர் கூட்டத்தில் வைத்தியகலாநிதி [திருமதி] நடராசா தொடர்ந்து பேசுகையில் பிறருக்கு உதவிசெய்யவேண்டுமென்று விரும்புகிற நாம் ஆபத்தான வேளையில் பிறருக்கு இரத்ததானம் செய்ய முன்வருவதில்லை. 17 வயது தொடக்கம் 50 வயது வரை எல்லோரும் நல்ல சுகமான தேகநிலையுடையவர்கள் இரத்தம் கொடுக்கலாம். இரத்தத்தை தானமாக நாம் கொடுக்கும்போது புதிய இரத்தக்கலங்கள் எமக்கு உண்டாகின்றன. இதன்மூலம் இரத்தம் அதிகமாக உற்பத்தியாகின்றது. இரத்தம் கொடுக்க முன்வருபவர்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை என்ருர்.

## கலந்துரையாடல்

(சுழிபுரம்)

சுழிபுரத்தைச் சேர்ந்த பொதுமக்கள் சிலர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமியை அரசாங்க செயலகத்தில் சந்தித்து பல்வகைப்பட்ட விடயங்களைப் பற்றி கலந்துரையாடினர். (கு)

## ஜவுளி இறக்குமதி குறைக்க முடிவு

(கொழும்பு)

உள்ளூர் ஜவுளி உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக இவ்வருடம் ஜவுளி இறக்குமதியில் 60 வீதத்தை குறைக்க அரசு முடிவுசெய்துள்ளது. (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மட்டுநகரில்

# இன்றும் நாளையும் கூட்டணி கிளைகள் புனரமைப்பு

(மட்டுநகர்)

மட்டக்களப்புத் தொகுதியில், தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை புனரமைப்பு வேலைகள் இன்றும் நாளையும் நடைபெறவிருக்கிறது.

கிளைகள் புனரமைப்புச் செய்வதற்காக யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், திருமலை எம்.பி. திரு.இரா சம்பந்தன் ஆகியோர் இன்று மட்டுநகர் வந்தடைவார்கள்.

இவ்விருவரும், மட்டுநகரில் தங்கியிருந்து கூட்டணி நடவடிக்கைகளை மட்டக்களப்பில் விஸ்தரிப்பதுபற்றி இங்குள்ள கூட்டணி பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்துவார்கள்.

இந்த ஆலோசனையில் திரு. இரா. அம்பலவாணர், திரு. காசி ஆனந்தன், திரு. பி. யோசப், திரு. மு. பாலசிங்கம், வணபிதா யோசப்மேரி உட்பட பலர் கலந்துகொள்வார்கள்.

இதே நேரத்தில் கூட்டணி சட்டத்துறை செயலாளர் திரு. சாம் தம்பிமுத்து மகளிர் பேரவை செயலாளர் திருமதி கலா தம்பிமுத்து ஆகியோர் கலந்துகொள்ள மாட்டார்கள் எனக் கூறப்படுகிறது.

அமைச்சர் திரு. இராசதுரை கூட்டணியைவிட்டு விலகி எட்டுமாதத்தின் பின் முதல் தடவையாகக் கிளைகள் புனரமைப்பு செய்யப்படுகிறது. (க)

---

## 'காசி' உரையாற்றுவார்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாராந்தக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை மாலை, தமிழர் விடுதலைக் கூட்டணிப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் கவிஞர் காசி ஆனந்தன் உரையாற்றுவார். (கெ)

---

## கிரிக்கட் டெஸ்ட் தொடரில் ஆஸி. வெற்றி

(மெல்பேண், பெப், 7

ஆஸ்திரேலியாவில் இங்கிலாந்து கோஷ்டிக்கும் ஆஸ்திரேலியக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற மூன்று டெஸ்ட் தொடரில் மூன்றிலுமே ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது.

நேற்று நடைபெற்ற 3-வது இறுதி . டெஸ்டில் ஆஸ்திரேலியா 8 விக்கட்டுகளால் வெற்றிபெற்ற போதிலும் இங்கிலாந்து கோஸ்டி வீரர் இயன் 2-வது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காது 119 ஓட்டங்களைப் பெற்றதும் இரண்டு இன்னிங்ஸ்களிலும் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீரர் டெனிஸ் லில்லி 11 விக்கட்டுகளைக் கைப்பற்றியதும் சிறப்பு அம்சங்களாகும்.

லில்லி இந்த டெஸ்ட் தொடரில் 23 விக்கட்டுகளை வீழ்த்தி இத்தொடரின் சிறந்த வீரருக்கான பரிசைத் தட்டிக்கொண்டார்.

ஆஸ்திரேலிய காப்டன் முதல் இன்னிங்ஸில் 114 ஓட்டங்களையும் 2-வது இன்னிங்ஸில் 40 ஓட்டங்களையும் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இறுதி டெஸ்ட் ஸ்கோர் விபரம் - இங்கிலாந்து 306, 268 -- ஆஸ்திரேலியா 477, 2--103. (இ)

---

## சொல்லுக்கும் செயலுக்கும் ஒற்றுமை இருக்க வேண்டும்

### பாடசாலை மண்டபத் திறப்பு விழாவில் வடமாநில கல்விப் பணிப்பாளர்

(ஊரெழு)

''தனக்காக வாழாமல் பிறர்க்காக வாழும் சேவை மனப்பான்மையுடைய ஒருவர் இப்பாடசாலையின் அதிபராக இருப்பது பெருமைக்குரியது. ஆசிரியர், பெற்றோர் என்போரின் அனுசரணையுடன் தான் ஒரு பாடசாலை வளர்ச்சியடைய முடியும். சிறுவர்கள் பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே, அவர்கள் வருங்காலத்தில் என்னசெய்யவேண்டுமென்பதை பெரியவர்களாகிய நாம் காட்டிக்கொடுக்க வேண்டும். பேச்சுக்கும், செயலுக்கும் ஒற்றுமை இருக்க வேண்டும். அப்பொழுதுதான் எந்தவொரு விடயத்திலும் மறுமலர்ச்சியை உண்டாக்க முடியும்''

இவ்வாறு ஊரெழு கணேச வித்தியாசாலையில் புதிதாக அமைக்கப்பட்டமண்டபத்தை திறந்துவைத்துப் பேசிய வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் கூறினார். பாடசாலை அதிபர் திரு. ச. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற மேற்படி திறப்புவிழா வைபவத்தில் இவர் தொடர்ந்து பேசுகையில் ''சிறந்த முறையில் பொருளாதாரத்தை வளர்க்கவேண்டுமானால் விவசாயத்தில் ஈடுபடவேண்டும். பாடசாலைகளில் விவசாயக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டு அதற்கு முக்கியமான இடம் அளிக்கப்பட்டிருக்கிறது'' என்றார்.

அதிபர் திரு. ச. கதிரவேலு பேசுகையில் ''எதிர்வரும் ஆண்டில் இந்தப் பாடசாலை பொன் விழாக் காணவிருக்கிறது. அப்பொழுது இந்தப் பாடசாலை ஒரு மகாவித்தியாலயமாக மாறக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்து கிடைத்த பண உதவியுடன் இந்த மண்டபம் அமைக்கப்பட்டதுடன் அதற்கு அருகே அமைக்கப்பட்டிருக்கும் அலுவலகஅறை ஒரு அன்பரின் சொந்த நிதியுதவியுடன் கட்டப்பட்டது. பெற்றோரும், பொதுமக்களும் அளித்துவரும் ஆதரவும் ஒத்துழைப்பும் பாடசாலையின் சிறப்பான வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்றன'' என்று குறிப்பிட்டார்.

இந்த வைபவத்தில் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா உட்பட பலர் கலந்துகொண்டு பேசினார்கள். உதவி அதிபர் திரு. சி. பாலசுப்பிரமணியம் வரவேற்புரையும், ஆசிரியர் திரு.வே.பரமநாதன் நன்றியுரையும் கூறினார்கள். விழாவின் இறுதியில்பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்ட கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

---

## 'பத்துவருடத்தில் தேங்காய் ஒன்றின்விலை 25 ரூபாவாக உயரும்''

(கொழும்பு)

பத்து வருடத்தில் தேங்காய் ஒன்றின் விலை 25 ரூபாவாக அதிகரிக்கும் என்று நிதி அமைச்சர் ரொனி டிமெல், தெவிநுவரையில்நடந்த கூட்டமொன்றில் தெரிவித்தார்.

இந்நாட்டில் தென்னஞ் செய்கை புறக்கணிக்கப்பட்டு வருவதால், பத்து வருடத்திற்குள் தேங்காயை 25 ரூபாவிற்கு இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சுதந்திரதினத்தை யொட்டி நடந்த இக்கூட்டத்தில், விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

அமைச்சர் ரொனி டீ மெல் மேலும் கூறியதாவது: இம்மாவட்டத்தில் உள்ள 11,000 ஏக்கர் தென்னந்தோட்டங்கள் சரியானமுறையில் கவனிக்கப்படவில்லை. வருடமொன்றுக்கு 10,000 தேங்காய்பறிக்கும் சில தோட்டங்களில்1000தேங்காய் மட்டுமே பறிக்கப்படுகிறது.

அரசு உரம், நாற்று மற்றும் பல வசதிகளை செய்துகொடுத்தும் இப்படியான அசிரத்தையினாலும், அக்கறையின்மையாலும், புறக்கணிப்பாலும் இலங்கை தேங்காயை இறக்குமதிசெய்யவேண்டியநிலை ஏற்படும் அந்த நேரம் உலக சந்தையில் ஒரு தேங்காயின் விலை 25 ரூபாவாக இருக்கும். (க)

---

## பாடசாலைகளில் கட்டிட வேலைகளை முடித்த அபிவிருத்திச் சங்கங்களுக்கு 40 லட்சம் ரூபா வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக் கட்டிடங்களை கட்டி முடித்த யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு இன்னும் 40 லட்சம் ரூபா வழங்கப்படவில்லையாம்.

கடந்த வருடம் 31ம்திகதிக்கு முன்னர் பாடசாலைக் கட்டிடங்களை கட்டி முடிக்க வேண்டும் என்று கல்விப் பகுதியினர் அறிவித்திருந்தனர். இதனால் குறிப்பிட்ட எல்லைக்குள் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் சகல கட்டிடங்களையும் கட்டி முடித்தன.

கட்டி முடிக்கப்பட்ட கட்டிட வேலைகள் தொடர்பாக கல்வி இலாகாவால் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டிய 40 லட்சம் ரூபாவும் இதுவரை வழங்கப்படவில்லையாம்.

இதன் காரணமாக சம்பந்தப்பட்டவர்கள் கல்வி இலாகாவுடன் பல முறை தொடர்பு கொண்ட போதும் இதுவரை பணம் வழங்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (கெ ர)

---

## ''ஈழநாடு'' வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இறுதி ஆட்டங்கள்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை யங்ஸ்ரேயல் விளையாட்டுக் கழகத்தின் 11வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி ''ஈழநாடு'' வெற்றிக் கிண்ணத்திற்காகவும் ஏனைய 11 வெற்றி விருதுகளுக்காகவும் கடந்த இரண்டு மாதங்களாக காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் நடைபெற்று வந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் இம்மாதம் 9-ம், 10-ம் திகதிகளில் நடைபெற இருக்கின்றன.

முதல் தினமான 9-ம் திகதி சனிக்கிழமை முதல்போட்டியாக இரண்டாம் பிரிவில் இளவாலை உதய சூரியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து காங்கேசன்துறை வொன் ஜெஸ்ட் விளையாட்டுக்கழகம் மோத இருக்கின்றது. இப்போட்டிக்கு காங்கேசன் துறை பட்டினசபை விசேட ஆணையாளர் திரு. க. சண்முகநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். அடுத்து நடைபெறும் முதலாம் பிரிவு ஏழுபேர் கொண்ட போட்டியில் குருநகர் சீநோர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சிறுவிளான் ஞானோதயா விளையாட்டுச்கழகம் மோதுகின்றது. இப்போட்டிக்கு காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை தொழில் முகாமையாளர் திரு. எஸ். சூரியதேவா பிரதமஅதிதியாகக்கலந்துகொள்வார்.

இறுதிநாளான பத்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமைநடைபெறும் முதல் போட்டியில் மூன்றும் பிரிவில் மாதகல் செல்வா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஊறணி புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. இப்போட்டிக்கு காங்கேசன்துறை பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. டபிள்யு முனசிங்கா பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். அடுத்து நடைபெறும் முதலாம் பிரிவு பதினொருபேர்கொண்டபோட்டியில் சிறுவிளான் ஞானோதய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. இப்போட்டிக்கு வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் தலைவர் திரு. டட்லி குணசேகரா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இச்சுற்றுப்போட்டியில் வடபகுதியைச் சேர்ந்த அறுபத்திநான்கு கழகங்கள் பங்குபற்றியிருந்தன. இறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கோஷ்டிகளுக்குத் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி, இளவாலை,சென்கென்றீஸ் கல்லூரி வீரர்களும் பங்குபற்றுகின்றனர். கடந்த வருடம் இச்சுற்றுப்போட்டியில் பல போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதி விழாவையொட்டி காங்கேசன்துறை நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது. போட்டிகள் முடிவடைந்ததும் ரசிகர்களின் வசதிக்காக விசேட பஸ் சேவைகள் செய்யப்பட்டுள்ளன. காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் நடைபெறஇருக்கும் இப்போட்டி 3-30 மணிக்கும் இரண்டாம்போட்டி 4-30 மணிக்கும் நடைபெறும்.

---

## பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் முதலாவது கிளைஅலுவலகம் மட்டுநகரில் திறக்கப்படும்

(மட்டக்களப்பு)

பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் முதலாவது கிளை அலுவலகம் அடுத்த மாதம் மட்டக்களப்பில் திறக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகள் சில தாமதமாய் நடைபெறுவதால் இவைகளை விரைவில் செய்துமுடிக்கவே இவ்வலுவலகம் திறக்கப்படவுள்ளது.

இவ்வலுவலகம் பெருந்தெருக்கள் இலாகாவின் விடுதி ஒன்றில் அமைவதால் அவ்விடுதிக் கட்டிடம் திருத்தப்பட்டுவருகின்றது.

இதனைத் தொடர்ந்து பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள மாவட்டங்களான திருகோணமலை, யாழ்ப்பாணம், பொலநறுவை, வவனியா, மன்னார், முல்லைத்தீவு, அம்பாறை, மாவட்டங்களிலும் கிளைஅலுவலகம் திறக்கப்படலாம் என அறியப்படுகின்றது. (க)

---

## வவனியா, முல்லைத்தீவில் சுவடிகள் வாரம்

(கொழும்பு)

வவனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் சுவடிகள் வார நிகழ்ச்சியாக சுவடிகள் பேணுதல், முகாமைபற்றிய சொற்பொழிவும், சிலைடு படக்காட்சியும் இம்மாதம் 19, 21ம் திகதிகளில் நடந்த ஒழுங்கு செய்யுமாறு அரசாங்க அதிபர்களுக்குத் தேசிய சுவடிக் கூடத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேசிய சுவடிக்கூடத் திணைக்கள தமிழ் வெளியீடுகளுக்கும் சாதனங்களுக்கும் பொறுப்பாயுள்ள திரு. நவசோதி இச் சொற்பொழிவினை நிகழ்த்தவுள்ளார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய -- சோவியத் நெருங்கிய உறவினுல்

# ஆப்கானிலிருந்து ரஷ்யப்படைகளை வெளியேற்ற பாரதத்தால் முடியும்

## பாக். ஜனதிபதி கருத்து

இஸ்லாமாபாத், பெப்.7 சோவியத்யூனியனுடன் இந்தியா நெருங்கிய நட்புறவு கொண்டிருப்பதால் ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படைகளை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியாவால் முடியும். அந்த முயற்சியில் இந்தியா ஈடுபடுமென்றும் நம்புகிறேன்.

இவ்வாறு பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஸியாவுல் ஹக் நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினர்.

தெரிந்தெடுக்கப்பட்ட பாகிஸ்தான் நிருபர்களிடமும் இந்திய நிருபர்களிடமும், கடந்த 3 நாட்களாக நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் அதிகாரிகள் நிலை பேச்சுவார்த்தைகள் குறித்து கருத்துத் தெரிவித்தார்.

தாம் இந்தியா செல்வதால் இந்திய-பாக் உறவுகள் பலமடையும் என்றுல் கிடைக்கும் முதல் வாய்ப்பையே பயன்படுத்திக்கொண்டு தாம் இந்திய விஜயத்தை மேற்கொள்ள விரும்புவதாகவும் அவர் கூறினர்.

இந்திய-பாக்-ஈரான் படைகளைக் கொண்ட கூட்டு சமாதானம் காக்கும் படை ஒன்று ஆப்கானிஸ்தான் எல்லையில் நிறுத்தப்படவேண்டுமென்றும் அவர் கருத்துத் தெரிவித்தார். (இ)

## ஜனதா, காங்கிரஸ், லோக்தள் ஐக்கிய முன்னணி

பட்ன, பெப். 7 பீகாரில் ஜனதா, அர்ஸ் காங்கிரஸ், லோக்தள் ஆகியன இணைந்து ஐக்கிய முன்னணி ஒன்று அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கார்களைப் பதிவு செய்ய 1,000 டாலர்!

சிங்கப்பூர், பெப். 7 சிங்கப்பூரில் மோட்டார் கார்களைப் பதிவு செய்வதற்கான கட்டணம் 15 டாலரிலிருந்து 1000 டாலராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தனியார் கார்களைப் பதிவுசெய்ய ஆயிரம் டாலரும், கம்பனிகளின் கார்களைப் பதிவுசெய்ய 5 ஆயிரம் டாலரும் இப்போது அறவிடப்படுகிறது.

இதையடுத்து அங்கு கார்களின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. ( )

## வெள்ளிவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் வெள்ளி விழா இம்மாதம் 14-ம் திகதி, மகா சிவராத்திரியன்று நடைபெறவுள்ளது. இதனையொட்டி சமய அறிவுப் போட்டிப் பரீட்சை நாளை மறுதினம் நடைபெறும். வெள்ளிவிழாச் சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. (கு)

## திருமதி காந்தியின் முன்னுள் உதவியாளர்மீதான குற்றச்சாட்டுகள் வாபஸ்

புதுடில்லி, பெப். 7 திருமதி இந்திராகாந்தியின் முன்னைய ஆட்சிக் காலத்தில் நெருக்கடிகால நிலை அமுலிலிருந்தபோது காங்கிரஸ்கட்சிக்கு நிதி திரட்டுவதற்காக அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியதாகவும் குற்றச்செயல் முயற்சியில் ஈடுபட்டதாகவும் திரு. மொரார்ஜியின் ஆட்சிக் காலத்தில் குற்றச் சாட்டப்பட்ட 10 உயர் அதிகாரிகள் மீதும் வழக்குகள் தொடரப்படமாட்டாதென்று மத்திய புலனய்வுக் கழகம் அறிவித்துள்ளது.

இது குறித்து குறிப்பிட்ட 10 பேருக்கும் தெரிவிக்குமாறு புலனய்வுக் கழகம் விசேட நீதிமன்ற நீதிபதி திரு. அகர்வாலைக் கேட்டுள்ளது.

திருமதி காந்தியின் முன்னுள் உதவி அந்தரங்கக் காரியதரிசி திரு. ஆர். கே. தவன், ஜனதிபதியின் அந்தரங்கக் காரியதரிசி திரு. கே. எல். தவன் ஆகியோர் உட்பட 10 பேர் மீதே முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (இ)

## ஹக், காந்தியுடன் தொலைபேசியில் பேசினர்!

இஸ்லாமாபாத், பெப். 7 இந்திய-பாகிஸ்தான் உயர் அதிகாரிகளிடையே நடைபெற்ற பேச்சுக்கள் பயனுள்ளதாகவும் திருப்திகரமாகவும் நடைபெற்றதென பாகிஸ்தான் ஜனதிபதி ஜெனரல் ஷியாவுல்ஹக் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியிடம் தொலைபேசியில் தெரிவித்தார்.

இந்திய வெளியுறவுக் காரியதரிசி திரு. சாத்தே பாகிஸ்தான் உயர் அதிகாரிகளுடனும் ஜெனரல் ஹக்குடனும் பேச்சு நடத்தியது தொடர்பாகவே திருமதி காந்தியிடம் தொலைபேசியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. (இ)

## வசதிகளற்ற 50 குடும்பங்களுக்கு உதவித் திட்டங்கள்

### உலகநிறுவனம் உதவி

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதி அம்பன் கிராமத்தைச் சேர்ந்த ஐம்பது வறியகுடும்பங்களுக்கு உதவிசெய்வதற்கு உலக விஷன் ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

இக்குடும்பங்கள்சிறுதொழில்களை மேற்கொள்ள போதிய வசதியை இந்த ஸ்தாபனம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அம்பன் கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக அண்மையில் இந்த ஸ்தாபனம் ஆயிரம் வாழைமரங்கள், நூற்றைம்பது கோழிக்குஞ்சுகள், இருபத்திரண்டு நல்லின ஆடுகள், உபஉணவு உற்பத்திக்கான விதைகள் என்பனவற்றை இக்குடும்பங்களுக்கு வழங்கியுள்ளன. கால்நடைகள் உணவுக்கான இப்பில் இப்பில், புல்வளர்ப்புக்கான வசதிகளையும் செய்துகொடுத்துள்ளதுடன் கால்நடைவளர்ப்பு, உபஉணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் முறைகள் பற்றி நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது.

வடமராட்சி வடக்கு கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபரும் குடத்தனை கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளருமாகிய திரு. வை. வேலும்மயிலும் நிறுவனத்தின் சார்பில் அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

## வீடியோ தொலைக்காட்சி: யாழ். மாநகரசபை ஆராயும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடியோ மூலம் தொலைக்காட்சி காண்பித்தலை தடைசெய்வதுபற்றி ஆலோசிப்பதற்காக யாழ். மாநகரசபைச் குழுக்கூட்ட மண்டபத்தில் இன்று காலை கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது.

யாழ். நகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். (க)

## தேர்தலுக்கு முன் அஸாமில் வெளிநாட்டினர் வெளியேற்றப்படுவர்

### உள்துறை அமைச்சர் உறுதி

புதுடில்லி. பெப். 7 அஸாமில் வெளிநாட்டுப் பிரஜைகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களது பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குவதுடன் அப்பிரஜைகள் நாட்டிலிருந்து வெளியேற்றப்படுவர்.

இவ்வாறு இந்திய உள்துறை அமைச்சர் திரு. ஸயில்சிங், அஸாம் மாணவத்தலைவர்களிடம் உறுதியளித்தார்.

அஸாமில் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர், வெளிநாட்டினர்கண்டுபிடிக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவரென்றும் இனிமேல்வாக்காளர் பட்டியலில் வெளிநாட்டினர் பெயர்களைச் சேர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வதாகவும் அமைச்சர் தம்மைச் சந்தித்த மாணவத் தலைவர்களிடம் உறுதியளித்தார்.

சட்டவிரோத ஊடுருவலைத் தடுக்கவும் அஸாம் பிரஜைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கூறியஅமைச்சர், மாணவர்கள் மேலும் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார்கள் எனத் தாம் நம்புவதாகவும் தெரிவித்தார். ( )

## ரஷ்ய நடனக்கலைஞர்கள் அமெரிக்காவில் புகலிடம்

டோக்கியோ, பெப். 7 ரஷ்ய 'பலே' நடனக்கலைஞர்கள் இருவர் அமெரிக்காவில் புகலிடம் தேடி ஜப்பானிலிருந்து நியூயோர்க் பயணமானுர்கள்.

ஜப்பானிய நடன நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக டோக்கியோ சென்ற இரு நடனக்கலைஞர்களான தாயும் மகனுமே அங்கிருந்து நியூயோர்க் பயணமானவர்கள்'

சோவியத்யூனியனில்கலைஞர்களின் சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிக்கப்படுவதால் அங்கு தொடர்ந்து வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாலேயே தாம் அமெரிக்காவில் தஞ்சம் புக [illegible] வதாக அவர்கள் இரு [illegible] டோக்கியோ வில் தெரி [illegible] ர். ( )

## "அரசுக்கு இன்று பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது" -- 'அமிர்'

(சுழிபுரம்)

"எமது மூலதனத்தைக் கொண்டு நாம் முன்னேறுவதே சிறந்த வழியாகும். பன்முகப்பட்ட நிதியில் ஒதுக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றியும் செலவு செய்த பணத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றது. இன்று அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது."

இவ்வாறு சுழிபுரம் மீனவர் தங்குமட புதிய கட்டிடத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

புதிய கட்டிடத்தை வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு திறந்து வைத்தார். சுழிபுரம் குகன் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் ஆசிரியர் திரு. எஸ், சதாசிவம் விழாவிற்கு தலைமை வகித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில்,

"இழுவைக் கப்பல்கள் செய்யும் தொல்லைகள், கடற்படையினர் செய்யுந் தொல்லைகள் பலவற்றை பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறினேன். இக்குறைபாடுகளுக்கு தக்க பரிகாரம் உடன் எடுக்கப்படும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பதில் தந்துள்ளனர். எம்மால் செய்யக்கூடிய காரியங்கள் யாவற்றையும் எந்த நேரமும் நாம் செய்யக் காத்திருக்கின்றேம்.' என்றுர் திரு. தா. திருநாவுக்கரசு, திரு. எஸ். மகாலிங்கம் உட்பட மற்றும் பலர் பேசினர். (கு)

## வசதிக்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறுகின்றனவா என்று கல்வித்திணைக்களமும் நூலக சேவைகள் சபையும் கண் காணிக்க வேண்டும் ஆனுல் நித்திரை செய்வதைப்போல் பாசாங்கு செய்கின்ற கல்வி அமைச்சை விழிப்படையச் செய்வதற்கு முதல் பாடசாலை அபிவிருத்திச்சங்கங்கள் இந்தப் பத்து சதவிகித ஒதுக்கீட்டை வற்புறுத்தி நடைமுறைப்படுத்தலாம்.

## தூதரக ஆக்கிரமிப்பு 7பேர் விடுதலை!

சன்சல்வடோர், பெப். 7 எல்-சல்வடோரிலுள்ள ஸ்பெயின் தூதரகத்தை தீவிரவாத இடதுசாரிகள் கைப்பற்றியதையடுத்து இராணுவ ஆட்சிமன்றம், இதுவரை காவலில் வைக்கப்பட்டிருந்த 13 பேரில் 7பேரை விடுதலை செய்தது.

ஸ்பெயின் தூதரகத்தைக் கைப்பற்றி தூதுவரையும் தூதரக அதிகாரிகளையும் பணயம் வைத்திருந்த தீவிரவாதிகள் இராணுவ மன்றத்தினுல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமது சகாக்களான 1[illegible]ரையும் விடுதலை செய்ய[illegible]டுமென்று நிபந்தனை [illegible]திருந்தனர். (இ)

## றொடீஷியத் தலைவர்களுக்கு மிரட்டல் கடிதம்

சாலிஸ்பரி, பெப். 7 றொடீஷிய தேசாபிமான முன்னணித் தலைவர்களான திரு. றொபேர்ட் முகாபே, என்கோமா ஆகியோருக்கு வெள்ளையர்களிடமிருந்து பல மிரட்டல் கடிதங்கள் வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

றொடீஷியாவிலிருக்கும் சிறுபான்மை வெள்ளை இனத்தவர்களிடமிருந்தே இத்தலைவர்களுக்கு மிரட்டல் [illegible] வருகின்றனவாம்.

றொடீஷிய பொதுத்தேர்தலுக்கு இன்னமும்மூன்றுவாரங்கள் இருக்கையில் அங்கு வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் திரு. முகாபேயின் இல்லத்திற்கு கைக்குண்டு வீசப்பட்டது தொடர்பாக இரு கறுப்பு இனத்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன்-புஷ்பலதா நடித்த
புகுந்த வீடு (புத்தம்புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்) தினசரி: 10-30, 4-45, 7-00, & 9-30 போன்: 7693
Zoltan Hound of Dracula

SRIDHAR JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 1-30, 4-15, 7-00 and 9-45 p.m.
Burt Lancaster - Dean Martin in
AIR PORT
The Great Novel.........Now A Motion Picture
Coming Soon : FRAMED BADGE 373

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
ஜெய்சங்கர் - ஜெய்சித்ரா
நாகேஷ், K. A. தங்கவேலு, S. A அசோகன்
பணக்காரப் பெண்
(புத்தம் புதிய கொப்பி)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா, தேங்காய் சீனிவாசன் நடிக்கும்
7-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன் யோகானந்த்

மனோஹரா A யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
Daily 10-30, 4-45, 7-00 & 9-30
7 FROM TEXAS

Shanthi JAFFNA Phone: 7642
A GRAND RELEASE !
Daily 5 Shows - 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
A deadly terror stalks the national parks...
Eighteen Feet, Two Thousand Pounds of Gut-Crunching, Man-Eating Terror...
THE DEADLIEST CLAWS ON EARTH !
Christiopher Lee in
"GRIZZLY"
HORROR! TERROR!! SUSPENSE!!! -Color-
- More Suited For Adults -

REGAL (Jaffna) Last few days
Daily at 2-00, -30, 7-00 & 9-30 P.m.
"FROM NOON TILL THREE" (Color)
Next : ONE FLEW OVER THE CUKOO' NEST

கடைசி வாரம்
ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் மங்கையர் கூட்டம்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
தேவதாஸ்
யாழ். நகரில் தேவதாஸ் திரையிடப்படும் கடைசி சந்தர்ப்பம் இதுவே. கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

# இன்றைய பலன்

தை மாதம் 25-ம் திகதி
வெள்ளிக்கிழமை
(8-2-1980)

மேடம்: இதயம் இன்பக் கூத்தாடும், களஸ்திரவழிச் சுகமுமுண்டு, திடீர் பிரயாணமும் ஏற்படலாம், வெளியிடத் தொடர்பும் பெருகும்.

இடபம்: அன்னியர் மத்தியில் கலகங்களுக்கு இடமளிக்கும், போக்குவரத்து விடயம் அவதானமாகக் கவனிக்மப்படல் வேண்டும், துயர்படிந்த நாள்.

மிதுனம்: தன்மானவிருத்திக்கும் தனவரவுக்கும் இடமுண்டு, சிலருக்கு வாகன சுகமுமுண்டு, குடும்பத்தில் தென்றல் வீசும், முன்னேற்றமான நாள்.

கடகம்: கடமையில் புதிய உத்வேகம் காணப்படும், இருப்பிட மாற்றம் ஏற்படின் சிறப்புடையதாகும், கடற்றொழிலாளர் திருப்தி காண்பர்.

சிங்கம்: பொருள் வளத்தில் புதுப் பொலிவு காணப்படும், சிலருக்குப் பிறந்தகத்தின் நினைவு தலைதூக்கலாம், பெரியோர் ஆதரவும் உண்டு.

கன்னி: ஆடம்பரப் போக்கால் செலவும் அதிகரிக்கும், வீண் பழிக்கும் ஆளாகுவீர்கள், தனிவழி நாட்டம் தவிர்ப்பதுடன் பொறுமையும் நன்று.

துலாம்: குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கும், தொழிலும் சீர்கெடும், கடன் தொல்லைகளும் அதிகரிக்கும்.

விருச்சிகம்: எதையும் சிறப்பாகச் செய்வீர்கள், வணிகர்களாயின் முன்னேற்றமடைவர், குடும்பத்தில் குதூகலம் தென்படும்.

தனுசு: மேலதிகாரியின் கண்டிப்புக்கு இலக்காகுவீர்கள், கல்வியில் கவனம் செலுத்தவும், கடமையிலும் சூழ்ச்சிகள் உருவாகும்.

மகரம்: ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள், மாதுருவழிச் சுகமும் உண்டு, தொழில் மகிழ்ச்சியுண்டு, திருப்தியான தினம்.

கும்பம்: கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும், இலட்சிய நோக்குடன் காரிய மாற்றுவீர்கள், இனசனக் கொண்டாட்டங்களுக்கு மிடமுண்டு.

மீனம்: என்னதான் திறமைசாலியாக இருந்தபோதும் இன்று கோட்டைவிடக்கூடும், சிலருக்கு நூதன ரோகமும் தென்படலாம், தொழில் துறையில் பொறுமையுடன் நடக்கவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி-நிர்மலா
லட்சுமி கல்யாணம்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-மாலினி பொன்சேகா
பைலட் பிரேம்நாத்

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ராஜஸ்ரீ
அனுபவி ராஜா அனுபவி

## வாழ்நாள் ...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

கறிஞரானார்.

1933-ம் ஆண்டு பருத்தித்துறை தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று சட்டசபை அங்கத்தவரானார். பின்னர் 1936ம் ஆண்டு நடந்த தேர்தலிலும் அதே தொகுதியில் போட்டியிட்டு மீண்டும் வெற்றி பெற்றார். 1947-ம் ஆண்டு யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

சிதறிக்கிடந்த தமிழினத்தை ஓரணியில் ஒரு கொடியின்கீழ் ஒரே கொள்கையின் வழியில் ஒன்றுபடுத்தி 1944ம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழுமுன் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை சிறுபான்மைமக்களின் சார்பில் விடுத்து சோல்பரி ஆணைக்குழுவிற்கு எதிராக அவர் நிகழ்த்திய நீண்ட ஆணித்தரமான, சரித்திரச் சான்றுகளை அன்னிய ஆங்கிலேயரே மயக்கும் வண்ணம் ஆங்கிலத்தில் இன்றைக்கு 35 ஆண்டுகளுக்கு முன்பே வருங்காலத்தில் தமிழீழம் பாரபட்சமாக நடத்தப்படும் என ஆணித்தரமாக அழகு சொட்டும் ஆங்கிலத்தில் அவர் அள்ளிவீசிய சொற்பொழிவு தமிழினத்தின் வரலாற்றில் முக்கிய சம்பவம் மட்டுமல்ல, அவரது அரசியல் தீர்க்கதரிசனத்திற்கும் எடுத்துக்காட்டாகும்.

இலங்கையின் தேசியக் கொடியில் முஸ்லிம் பெருமக்களையும், தமிழ் மக்களையும் குறிக்க இரண்டு நிறங்களை இடம்பெறச்செய்த பெருமைக்குரியவர்.

இலங்கையின் சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் தொடர்ச்சியாக நீண்டகாலம் அங்கம்வகித்த தலைவர். உலகத்தின் பல நாடுகளுக்கும் ஈழத்தின் சார்பில் தூதுசென்ற தூதுத் தலைவர். உலகமன்றமான ஐ. நா. சபைக்கு இலங்கைக்குதலைமைதாங்கிச்சென்று அச்சபையிலேயே, சங்கத் தமிழ் இலக்கியமான "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பதை எடுத்துரைத்து தமிழன் பெருமையை உலகம் எல்லாம் பரவச்செய்த தலைவர் அவர். அவர் 1956ம் ஆண்டு சிங்களம்தான் சட்டம் எனக் கொண்டுவரப்பட்டபொழுது நிகழ்த்திய உருக்கம் மிகு உரை ஒவ்வொரு தமிழனும் படிக்கவேண்டிய அறிவுக் கருவூலமாகும்.

அன்னார் அமைச்சராக இருந்த காலத்தில் தமிழர் பிரதேசம் வளம்பெற நல்ல பல ஆலைகள் நிறுவியவர். இன்னும் கடற்றொழிலாளர் நலம் சிறக்க கடற்றொழிலை நவீன மயமாக்கியவர். இவர் காலத்திலேதான முதன்முதவில் பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டமும், சிறுகைத்தொழிலும், தமிழர் பிரதேசங்களில் வளம்பெற ஆரம்பித்தன. பொற்றொழிலாளர்களுக்கு பவுணும் இவர் காலத்திலே தான் வழங்கப்பட்டன.

இவையெல்லாம் அன்னாரின் சாதனைகளில் ஒரு சிலவே. இன்னும் சட்டத்துறையில் அவர் நிலைநாட்டிய சாதனைகள் எமது அன்மைக்கால வரலாற்றில் எவரும் சாதித்தது கிடையாது. ஏனெனில் அவர் தனக்கென தனியான ஒரு வரலாற்றைக்கொண்டிருந்தார். அதில் 1962ம் ஆண்டின் புரட்சி சதி வழக்கும், ரஞ்சனிடாக்ஸி வழக்கும் ஒரு சிலவாகும். தான் ஆஜராகிய ரஞ்சனிடாக்ஸி வழக்கின்மூலம் 1000 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த விரலடையாளச் சட்டத்தை மாற்றியமைத்து, உலகப்புகழ் பெற்ற ஸ்கொட்லண்ட்யார்ட் துப்பறியும் பிரிவினரையே ஆச்சரியத்தில் ஆழ்த்திய சட்ட விற்பன்னர். இவரதுவரலாறுதமிழினத்தின் வரலாறு. தனித்தனியாக ஆராய்ந்து வெளியிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்தத் தலைமுறையைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் அவரிடமிருந்து எவ்வளவோ நன்மையைப் பெற்றார்கள். கடைசிவரை எந்த இட்சி யங்களுக்காக அவர் பாடுபட்டாரோ அவற்றுக்காக உழைப்பதுதான் தமிழ்ப்பேசும் மக்கள் அவருக்குச் செய்யும் கைமாறு.

## 100ரூபா சம்பளம் அதிகரிக்குக

(மட்டக்களப்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால் சகல தொழிலாளர்களுக்கும் 100ரூபா சம்பள உயர்வு வழங்க வேண்டும்...

இவ்வாறு கோரும் கடிதம் ஒன்றினை ஜனாதிபதிக்கு ஸ்ரீலங்கா தேசிய போக்குவரத்துஊழியர் சங்கக்கிழக்குப் பிராந்திய பிரதம அமைப்பாளர் திரு. சோ. சசீஸ்குமார் அனுப்பியுள்ளார். (கு)

......

## புதிய நிர்வாகிகள்

(பஷையூர்)

யாழ்ப்பாணம் பாஷையூர் புனித அந்தோனியார், விளையாட்டுக்கழகத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: அருட்திரு. மகேந்திரன் ராஜ்நாயகம் உபதலைவர்: ஏ. பிரான்சீஸ், ஜீ. சூசைப்பிள்ளை. செயலாளர்: ஜீ. ஜீ. தேவதாசன். உபசெயலாளர்: எவ். யேக்கப். பொருளாளர்: பி. சின்னமணி. இத்துடன் 7 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (கு)

......

## அமரர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பில் நிறைவேற்றி தமிழினத்தைச் சிந்திக்கவைத்தார்.

1977 ஆவணிக் கலவரம் நடந்தபோது வெளிமாவட்ட தமிழாசிரியர்கள் யாழ். மாவட்டம் வந்து கடமையாற்றப்பாடசாலைசெல்லாது, அதனால்சம்பளம் கிடைக்காது, கஷ்டப்பட்டபோது கல்வி அமைச்சரை தமிழ் தலைவர்களின் துணையுடன் பேட்டி கண்டு கல்வி அமைச்சு அதிகாரியை யாழ்ப்பாணம் வரவரவழைத்து ஆசிரியர் லீவுப் பிரச்சினை, சம்பளப் பிரச்சினை முதலியவற்றைத் தீர்த்து வைத்து தொழிசங்கப் பேதமின்றி அனைத்து ஆசிரியர்களின் பாராட்டுதல்களையும் பெற்றார்.

போக்கும் வரவும் இயற்கை நியதி. சிந்திப்பின் சிந்தை கலங்க நியாயமிருப்பதாகத் தெரியவில்லை. ஒரு சிலரின் வாழ்வும், சேவையும் மக்கள் மனதில் மறக்கமுடியாத நிலையை ஏற்படுத்தி அவர்களை அமரர்களாக்கிவிடுகின்றன. இந்த வகையில் சலனமற்ற தொழிற்சங்க உழைப்பால், ஆசிரியர்களுடன் பழகிய பண்பால், நாகரிகத்தால் தன்னை உருக்கி ஒளிதரும் மெழுகுவர்த்திபோல் பொதுத் தொண்டு புரிந்த பாலா அமரர்பதம் எய்திவிட்டார்.

இவர் வாழ்வும் தொண்டும் எம்மவர்க்கு ஒரு கலங்கரை விளக்கம்.

அமரர் பாலாவின் ஆத்மா சாந்திபெறுவதாக!

......

## சாம்பியன்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்பளிப்பு சுற்றுக்கேடயமும் பரிசளிக்கப்படும். 11 வீரர் போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெறும் கோஷ்டிக்கு திரு. சு. தர்மகுலசிங்கம் அன்பளிப்பு வெற்றிக் கிண்ணம் பரிசளிக்கப்படும். 7 வீரர் போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெறும் கோஷ்டிக்கு யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. எம். த்மநாதன் அன்பளிப்பு வெற்றிக்கிண்ணமும் வழங்கப் படும்.

சிறந்த விளையாட்டு வீரருக்கு திரு. கே. நாகராசா அன்பளிப்பும், சிறந்த கோஷ்டிக்கு திரு. எஸ். மரியநாயகம் அன்பளிப்பு வெற்றிக்கிண்ணமும் பரிசளிக்கப்படும். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dilka** Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...




டில்கா வாச்வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல்மாடி
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


ஈழநாடு The EELANAADU 50 சதம்

## நீதிமன்ற அமர்வு நேரத்தில் மாற்றம்

(புலோலி)

அரசாங்கத்தின் புதிய வேலை நேரத் திட்டத்திற்கமையப் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற விசாரணை அமர்வு நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

வேலை நாட்களில் தினமும் 9-15 மணி தொடக்கம் 12-30 மணிவரையும். பிற்பகல் 1-15 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும் நீதிமன்ற விசாரணைக்கான அமர்வுகள் இருந்துவருமென்று பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் அறிவித்துள்ளார். (கு)


நியூ கேம்பிறிட்ஜ்
டியூடோறியல் இன்ஸ்ரிரியூட்
திருநெல்வேலி சந்தி,

ஆரம்பமாகியுள்ளது.

G. C. E. (A/L) வர்த்தகம் விஞ்ஞானம்
April & August 1981
G. C. E. (O/L). Grade 9 Dec 1980
Radio & Electronics-with Practical
Advanced & Spoken English
Short Hand & Typing
I. B. K. I. A. A.

விபரங்கட்கு நிர்வாகி


ஊக்கமளிக்கப்பட்டால்

# தேவைக்குமேலாக கருப்பட்டி உற்பத்தி செய்ய முடியும்

## உடுப்பிட்டி எம். பி. நம்பிக்கை

(புலோலி)

யாழ் மாவட்டத்திலுள்ள பனை மரங்களில் பதநீர் இறக்கப்படும் தொழில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு பனங்கட்டி உற்பத்தி நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுமானால் வடபகுதியின் தேவைக்கும் மேலான கருப்பட்டியை உற்பத்திசெய்யமுடியும். இலங்கையில் மாத்திரமன்றி உலக நாடுகள் அனைத்திலும் பணவீக்கம் பெருந் தாக்கங்களை ஏற்படுத்திவருகின்றது. இதனால் அபிவிருத்தி வேலைகள் யாவும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தவேண்டியது மிக முக்கியமாகின்றது.

இவ்வாறு பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் அல்வாய் தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க பாரதிதாசன் சனசமூகநிலையப் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்து உரையாற்றிய போது குறிப்பிட்டார். மூத்த தமிழ்ச்சோதி திரு. ஆ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கட்டிடத் திறப்புவிழாவில் தொடர்ந்து பேசிய எம். பி. துரைரத்தினம் குறிப்பிட்டதாவது:

இளைஞர்கள் எதுவித அரசியல் வேறுபாடுகளோ குரோதமோ இன்றி நாட்டுப் பற்றுடன் கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடவேண்டும். தற்போது எமது பகுதி அபிவிருத்தி வேலைகள் யாவும் குறுக்கப்பட்டுவிட்டன. மகாவலி அபிவிருத்தித்திட்ட வேலைகளுக்கே முதலிடம் அளிக்கப்பட்டு வருகின்றது. எனவே எமது பகுதி இளைஞர்களும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்றஅமைப்புகளும் கிராம அபிருத்தியையே இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டு வரும்போதுதான் எமக்கு அரசியல், பொருளாதார சுதந்திரம் ஏற்படமுடியும்.

நாம் வடபகுதியைப் பொறுத்தமட்டில் நாம் இங்கு மாத்திரம் இருந்து எமது தேவைகளை பூர்த்திசெய்ய முடியாது. எனவே நாமும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சென்று குடியேறி எமது தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்திசெய்யவேண்டும்.

இந்த அல்வாய்க் கிராமத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானோர் தென்னிலங்கையில் கூடுதலாக முதலீடுசெய்துள்ளனர். இந்த முதலீடுகளின் பெரும்பகுதியை இப்பகுதிகளில் அவர்கள் முதலீடு செய்வார்களாயின் எமது இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க முடிவதுடன் எமது பகுதிகளையும் அபிவிருத்திச்செய்யமுடியும்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுப்பிட்டி எம். பி. திரு. இராசலிங்கம் உரையாற்றுகையில், எமக்கிடையேயிருந்துவந்த அரசியல் வேறுபாடுகள், கருத்து வேற்றுமைகள், வர்க்கவேறுபாடுகள், சமூகவேறுபாடுகள் என்பவற்றைக் களைந்துவிட்டு கிராமியப் பொருளாதார சுபீட்சத்தையே இலட்சியமாகக்கொண்டு செயற்பட்டு வரவேண்டும். கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூகநிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள் என்பன பரந்த கண்ணோட்டத்துடன் இயங்க வேண்டும். கிராமங்களைப் பொறுத்தமட்டில் கிராமிய மக்களின் ஒற்றுமையிலும், நாட்டுப்பற்றிலுமே அக்கிராமங்களின் வளர்ச்சிகள் தங்கியிருக்கின்றன.

## இம்முறை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஆதனை அறிவித்தார்.

பொதுப் போக்குவரத்துச் சேவை, மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், மாட்டுவண்டில்கள் போன்ற தனிப்பட்ட வாகனங்களைப் பொதுமக்கள் மேதினக் கூட்டங்களுக்குச் செல்லப் பயன்படுத்தலாமென்றும் ஜனாதிபதி கூறினார்.

எண்ணை விலை அதிகரிப்பினால் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்று ஜனாதிபதிவலியுறுத்தினார். (ம)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தேசிய சுயரோகத் தடுப்புச்சங்கத்தின் கோப்பாய்க்கிளை நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் நாவலர் த. க. வித்தியாலயத்தில் வைத்தியகலாநிதி க. சிவஞானரத்தினம் தலைமையில் வருடாந்தப் பொதுக்கூட்டத்தை நிகழ்த்தும்.

யாழ். வைத்தியசாலை மார்பு நோய்ச் சிகிச்சை நிலைய வைத்திய அதிபர் திருமதி. பி. அரியரத்தினம் நல்லூர் கிராம சபை விசேட ஆணையாளர் திரு. ஆ. மகாலிங்கம், யாழ். கிளை அமைப்பாளர் திரு. எஸ். ஆர் சரவணபவன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர். (நா)

# மகன், மருமகள் மீதான குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லையாம்

## மொரார்ஜி கூறுகிறார்

புதுடில்லி. பெப். 7 தமது மகன் காந்திலால் தேசாய்க்கும், மருமகள் பத்மா தேவிக்கும் எதிராக வைத்தியலிங்கம் நீதிவிசாரணை அறிக்கையில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார்.

திரு. தேசாய் பிரதமராக இருந்தபோது அவரின் செல்வாக்கைப் பயன்படுத்திய காந்திலால் தேசாயும். பத்மாதேவியும் அரசியல் சட்ட அதிகாரத்தில் தலையிட்டு, ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களென வைத்தியலிங்கம் அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

காந்திலால், பத்மாதேவி, முன்னாள் பிரதமர் சரண்சிங்கின் மனைவி காயத்திரிதேவி ஆகியோரின் நடவடிக்கைகளை விசாரணைசெய்யுமாறு திரு. தேசாயின் அரசே நீதிபதி திரு. வைத்தியலிங்கத்தை நியமித்திருந்தது தெரிந்ததே. (இ)

மாத்தளையில் நாளை

# "தோட்டக் காட்டினிலே" சிறுகதை வெளியீடு

(பாழ்ப்பாணம்)

மலையக இளம் எழுத்தாளர் மூவரின் சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா நாளை மாத்தளையில் நடைபெறுகிறது.

மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன், மலரயன் ஆகியோரது சிறுகதைகள் அடங்கிய தோட்டக் காட்டினிலே'' என்றநூல்வெளியீட்டு விழா நாளை மாலை மாத்தளை பாக்கிய வித்தியாலயத்தில் நடைபெறும்.

திருவாளர்கள் டொமினிக் ஜீவா, எஸ். சாந்திகுமார், மௌனகுரு, மு. நித்தியானந்தன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

சிறுகதை நூல் வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

## விபுலாந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவதுடன் 100க்கும் மேற்பட்ட அண்ணாவிமாருக்கு நீரக மகளிர் (பாடுமீன்) பொதித்த வெள்ளி விருதுகளையும் ஜனாதிபதி பரிசளிப்பார்.

## ஆடை உற்பத்தி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படஉள்ளது.

அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் தமிழ்ப்பகுதி நெசவாளர்களை கைதூக்கிவிடும் நோக்குடன் தமிழ் இளைஞர் பேரவை இந்நடவடிக்கையை எடுத்துள்ளது. (கு)


மக்கினொன் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி,
மதுரை, பம்பாய்,
கோலாலம்பூர்,
சிங்கப்பூர், பரிஸ்,
லண்டன், துபாய்,
சவூதி அரேபியா,
கனடா
ஆகிய நாடுகளுக்கு
அழைத்துச் செல்ல

மற்றும்
பாஸ்போட்,
அமெரிக்கன்
டிறவலர்ஸ் செக்
உலகின் எப்பகுதிக்கும்
விமான டிக்கட்,
சுற்றுலாக்கள்
ஆகிய உங்கள்
தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்குசெய்துகொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

மக்கினொன் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்.,

தபால்பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!



மீண்டும் யாழ். நகரில்

மரிக்கார் எஸ். ராம்தாஸின்

இறேஸி கோமாளிகள்

10-2-1980 ஞாயிறு பி. ப. 4-30 மணி
யாழ். வீரசிங்கம் மண்டபம்

பிரவேசம்: ரூபா 50, 25, 15, 10, 5
ரிக்கற்றுக்கள் விற்பனையாகும் இடம்:

- நியூ டில்க்கா ஹாட்டல் (ஆஸ்பத்திரி வீதி)
- பூபாலசிங்கம் புத்தகசாலை (பஸ்நிலையம் எதிர்)
- கௌரி ரெக்ஸ்ரயில்ஸ் (நியூ மாக்கட் யாழ்ப்பாணம்)
- குட்லக் ஹாட்டல் (ஆஸ்பத்திரி வீதி)
- றிச் கோப்பி (B) பார் (நியூ மாக்கட் யாழ்ப்பாணம்)
- சித்ராலயா ஸ்ருடியோ (ஸ்ரான்லி றோட்)

4903


இப்பத்திரிகை [illegible] லிமிட்டெ[illegible] ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி மா தம் 8-ந் [illegible] அச்சிட்[illegible] வெளியிடப்பட்டது.
Registered as a News[illegible] at the General Post Office, Sri Lanka under No QD/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org